
www.padippakam.com

# புதுமை

இல - 3
சித் - ஆனி '89
விலை - 4 டீ.எம்


அரசியல், பொருளாதார, கலை, கலாச்சார இதழ்.



விமர்சனம் என்ற ஆயுதம் ஆயுதங்களால் செய்யப்படும் விமர்சனங்களுக்கு மாற்றீடாக இருக்கமுடியாது (மார்க்ஸ்)

படிப்பகம்

www.padippakam.com



புதுமை பற்றிய உங்கள் விமர்சனங்களையும்
மற்றும் உங்கள் ஆக்கங்கள், ஆலோசனை
களையும் எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

PUTHUMAI
MAINZER LANDSTR.147
6000 FRANKFURT 11
WEST GERMANY.

---

முன் அட்டை ஓவியம்: சந்தானம்
நன்றி: 'முகில்களின் மீது நெருப்பு'

படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியர் கருத்து

இரண்டு "தேர்தல்கள்" நடந்து முடிந்து விட்டன. வாக்களிக்கப்பட்ட அமைதி வந்த பாடில்லை. ஆயுதங்களின் மூலம் வராத அமைதியை ஒரு புள்ளடி கொண்டு வரும் என எண்ணிய மக்களுக்கு வழமை போல் ஏமாற்றம்தான். கொலை, கடத்தல், ஆட்கள் காணாமல் போதல், பெண்கள்மீது பலாத்காரம் குறைந்த பாடில்லை. குறிப்பாக ஒரே மாதத்தில் முல்லைத்தீவில் 300மேற்பட்டஈழ மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். புலிகளை ஒளிப்பதற்காக காடுகள் எரிக்கப்பட்டுள்ளன.

நடந்த சண்டையிலிருந்து இரு விடயங்கள் தெளிவாகின. இந்தியா ஆமியாலும், அவர்களின் உதவிகளாலும் புலி இயக்கத்தினரை அழிக்கமுடியாதென்றும், புலிப்படையினரால் இந்தியா ஆமியை அழிக்க முடியாதென்பதுதான். இவ் யுத்தத்தால் பெரும் அழிவு பொது மக்களுக்குத்தான். பொது மக்களின் "இருப்பில்" அக்கறை கொண்ட அனைவரும் இக் கசப்பான உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனால் ஒரு ஒப்பந்தத்திற்கு சகல பகுதியினரும் வரவேண்டும். இன்று ஈழத்தில் நடைபெறும் சகல அழிவுகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். ஒப்பந்தம் என்பது போராட்டத்தை கைவிடுவதென்பது அர்த்தமல்ல தேவைப்படின் பூதத்தின் மாமியாருடனும் ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்ற தோழர் லெனினின் கூற்றை இங்கு நினைவு கூற விரும்புகிறோம். சமீபத்தில் பல பகுதியினரிடம் ஒப்பந்தத்திற்கான பேச்சு



படிப்பகம்

www.padippakam.com

வார்த்தைகள் உத்தியோக பூர்வமாகவும் உத்தியோக பூர்வமற்றும் நடந்து வருவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். இவ் ஒப்பந்தங்கள் பிரச்சனைகளைத் தீர்த்து விடும் என்பதில் எமக்கு நம்பிக்கையில்லை.

ஆனால் இப்போது மக்களுக்கு ஏற்படும் அழிவு ஓரளவு குறைக்கப் படலாம். மக்கள் மூச்சு விட நேரம் கிடைக்கலாம்.

ஒப்பந்தம் பின்வருவனற்றை முக்கியமாகக் கொண்டிருந்தால் நாம் அதை வரவேற்போம்.

உடனடியான யுத்த நிறுத்தம், தமிழ்ப் பகுதிகளில் மீண்டும் ஜனநாயக உரிமை திரும்பவும் நடை முறைப்படுத்தல் அதாவது மக்கள் அச்சமில்லாமல் அரசாங்கத்தையோ, இயக்கங்களையோ விமர்சிக்கும் உரிமை அளிக்கப் படவேண்டும். அத்துடன் மக்கள் விரும்பினால் அவர்கள் தாமாகவே ஒரு அமைப்பை உருவாக்க உரிமை இருக்க வேண்டும், இதற்கு எதிராக நடைபெறும் கொலை மிரட்டல்கள், இருக்கக் கூடாது. ஈழ, மலையக, சிங்கள இடதுசாரி அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்டு நடத்தப் படும் சிங்களக் குடியேற்றத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

தமிழ் சிங்கள பகுதியில், வாழும் சிறு பான்மையினருக்கு பாதுகாப்பளிக்கப் பட வேண்டும்.

புத்திஜீவிகளின் முக்கிய கடமை, புத்திஜீவிகளின் தலைமையை தேவையற்றதாக்குவதே.



படிப்பகம்

# . . . . . . . . வேர்களை வெட்டிய பின்

அதற்கு முன்னர்

என்னை நானே வெறுக்கிறேன்
ஆண் ஆதிக்கத்தின் மொத்த வடிவமாக
கண்கள் தொடும் இடுப்பு வரையும்
இவற்றையே இருப்புக்கள் ஆக்கும்
கேவலம்; விகாரத் தேடித் திரிவேன்
என்ற எண்ணமுடைய என்னை
நானே வெறுக்கிறேன் !

சின்ன வயதில் பெண்களைக் கண்டால்
ஒதுங்கி இடங்கொடுப்பது தொடக்கம்
எம்முடன் இணைந்து கைகோர்த்து வாருங்கள்
உங்கள் விடுதலை உறுதி என்ற கோசம் வரையும்
பெண்கள் ஏதோ நம்மை விடக் குறைந்தவர்
உதவி செய்ய நாமிருக்கின்றோம் - என்று
ஆழமாய் ஊன்றிய ஆண்முதல் வாத
நடத்தைகள் ; நியாயங்கள் என்பதைப் புரியாதிருப்பதால்
இன்று என்னை நானே வெறுக்கிறேன் !

என்னுள் இருக்கும் பன்னூற்றாண்டு பழுத்து படர்ந்த
ஆண் ஆதிக்கப் பெரும் வேர்களை
வெட்டியெறியாதிருக்கும் வரைக்கும்


www.padippakam.com

பெண்ணைத் தாழ்த்தும் சமூகம் ஒன்றில்
நானும் ஒருவன் என்பதால் இன்று
என்னை நானே வெறுக்கிறேன்.

எனக்கு நானே சொல்கிறேன் :-

* உன்னுள் இருப்பதை வெளியே வீசி எறிந்துவிடு
* உனது பாலியல் கண்கள் இரண்டையும்
குத்திக் கிழித்து வேறு கண்களை அப்பிவிடு
* உன்னை நீ யாரென்று அறிந்து கொள்ளாதவரை
பெண்ணுரிமை பற்றிப் பேசுவதேன் - உன்னை
மீட்பராய்க் காண அவர்களுக்கு
ஏது அவகாசம்
* முதலில் உன்னைப் பற்றி சிந்தித்துப் பார்
உன்னைப் பற்றியே பேசு - பின்
உன் இருப்பினை எரித்துப் புதிய மனிதனாய்ப்
பிறந்து வா... இந்த விடயம் பற்றிப் பேசலாம்?

ம. நிசந்திரன்.






படிப்பகம்

# புதிய லெனின்?

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக இரு சொற்பதங்கள் உலகம்முழுக்க வலம் வருகின்றன. Prestroika, Glasnost என்பவையே அவ்விரு சொற்களாகும். இவ்விருசொற்களுக்கும் பின்னே ஒரு மனிதர் அவர்தான் கொர்பாச்சோவ். சென்ற ஆண்டு இவரின் படத்தை தாங்கிவராத பத்திரிகைகளே இல்லையெனலாம். சந்தேகமின்றி 86/87ஆம் ஆண்டுகள் இவரின் ஆண்டுகளே. இந்த மனிதர் முன்பு சோவியத்யூனியனில் பேசப்படாத பிரச்சனைகளை வெளிப்படையாக மக்கள் மத்தியில் பேசுகிறார். பல அரசியல் கைதிகளை விடுதலை செய்கிறார். சோவியத் மக்களுக்கு மேலதிக ஜனநாயகம் வேண்டும் என்கிறார். அதுமட்டுமல்ல மக்களே அதிகாரவர்க்கத்தை தூக்கியெறிய வேண்டுமென்கிறார். இவ்நிகழ்ச்சிகளெல்லாம் சோவியத்தின் இரண்டாவது புரட்சி என்கிறார். முன்பு சோவியத்யூனியனை விட்டு வெளியேறிய பலர் நாடுதிரும்புகிறார்கள். அத்துடன் முன்பு தடைசெய்யப்பட்ட நூல்களும், திரைப்படங்களும் இப்போ வருகின்றன. சோவியத்திலுள்ள அதிகாரவர்கத்திற்கும் தலையிடியைக் கொடுக்கிறார். அதுமாத்திரமல்ல சோவியத்யூனியனை "கொடூர அரசு", "சிவப்புப் பேய்" என்று வர்ணித்து தமது அரசுகளின் பலத்தை அணுவாயுதம் முதல் நட்சத்திரப் போர் (Star War) முறைவரை பலப் படுத்திக்கொண்டிருக்கும் ஏகாதிபத்திய அரசுகளுக்கும் இவர் பெரும் தலையிடியைக் கொடுத்துவருகிறார். நாளுக்கு நாள் படைக்குறைப்பு, அணுவாயுதக் குறைப்பு, விசவாயுக்குண்டுகளை அழித்தல் என பல குண்டுகளைப் போட்டு ஏகாதிபத்திய ஆதிக்க வெறியர்களை பல சங்கடத்துக்குள்ளாக்கி வருகின்றார். ஏனெனில் மேற்கத்தைய மக்கள் முன்போல் தமது அரசுகளின் பொய்ப் பிரச்சாரங்களை நம்புவதில்லை. குறிப்பாக கொர்பச்சோவ் எழுதிய (PRESTROIKA என்னும் புத்தகம் அமெரிக்கா உட்பட வெவ்வேறு ஏகாதிபத்திய நாடுகளில் விற்பனையானமை கொர்பச்சோவிற்கு மேற்கு நாடுகளிலும் ஆதரவு பெருகி வருவதைக் குறிக்கிறது.

www.padippakam.com

சோவியத்யூனியனின் அணு ஆயுதங்களை இவ்வரசுகள் கொர்பச்சொவுக்கே மிகவும் பயப்படுகின்றன. இவரின் ஆதரவைக்குறைக்க பல்வேறு புதிய யுக்திகளை கையாள வேண்டியுள்ளது.

பிரஸ்ரொய்க்கா என்பது சமுதாயத்தில் சகலமட்டத்திலும் மறு நிர்மாணம் செய்து சீரமைப்பதாகும். பொருளாதாரம் தொடக்கம் ஆட்சி அதிகாரம் வரை உள்ளடங்குவது. இது மக்களுக்கு புதிய உணர்வை ஊட்டுவதுடன் உழைப்பிலும் நிர்வாகத்திலும் மக்களை மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடச் செய்யும் என்பது கொர்பச்சொவின் நம்பிக்கை. அத்துடன் விமர்சனங்கள் சுய விமர்சனத்துடன் சோவியத் மக்களுக்கு மேலதிக ஜனநாயகத்தை அளிப்பது என்கிறார்.

கிளாஸ்நோஸ் என்பது 'வெளிப்படையானது'. அதாவது சமுதாயத்தில் சகல நிகழ்வுகளையும் தயவு தாட்சண்யம் இல்லாமல் வெளிக் கொணர்வது, ஆராய்வது ஆகும். இது கொர்பச்சொவின் கூற்றுப்படி மக்கள் உயிர்வாழ்வதற்கு காற்று எவ்வளவு முக்கியமோ, அதேபோல் சோவியத் மக்களுக்கும் இது முக்கியமானது. அதுமாத்திரமல்ல ''கிளாஸ்நொஸ்'' இல்லாமல் ஜனநாயகம் இல்லை ஜனநாயகம் இல்லாமல் நவீன சோசலிசம் இல்லை என ரோசாலக்சம்போர் பாணியிலும் பேசுகிறார். கொர்பச்சோவ் என்னும் மனிதர்

இந் நிகழ்வுகள் எல்லாம் கொர்பச்சோவ் என்னும் தனி மனிதனால் ஏற்படுத்தப்படும் மாற்றங்களும் அல்ல, இவர் பல கோடி சோவியத் மக்களின் பிரதிபலிப்பே. அது மாத்திரமல்லாமல் இவ் நிகழ்வுகள் அன்று நிகழாமல் இன்று நடைபெறுவதற்கான காரணங்களையும் ஆராய வேண்டும். 1917ல் ஒக்டோபர் புரட்சி ஏற்பட்டபோது ரஷ்சியா ஒரு பின்தங்கிய நாடு 90% மான மக்கள் விவசாயத்தையே செய்தனர். அத்துடன் கிராமத்தில் வாழ்ந்தவர்களில் 30%மானோர் படிப்பறிவற்றவர்கள், அத்துடன் முதலாம்



படிப்பகம்

www.padippakam.com

உலக யுத்தத்தம் ரஷ்சியாவில் அழிவுகளை ஏற்படுத்தியது, அதுமாத்திரமல்ல புரட்சியை முறியடிக்க 14 ஏகாதிபத்தியங்கள் படையெடுத்த புரட்சி (சோவியத் யூனியனை மேலும் நலிவு படுத்தின.

இதன்பின்னர் உள்நாட்டு யுத்தமும் பஞ்சமும் பலகோடி மக்களை விழுங்கியது. இதிலிருந்து விடுபடமுன் ஸ்ராலின் பயங்கரவாதம், இவரால் அழிக்கப்பட்ட கட்சித்தோழர்களும் விவசாயிகளும் பல லட்சக் கணக்கில் அடங்குவார்கள் இவற்றிலிருந்தும் முச்சுவிடத்தொடங்க இரஸ்சிய மக்களின் அடுத்த அடி இரண்டாம் உலகப்போர், இப்போர் 20மில்லியன் (2கோடி) சோவியத் மக்களை பலியெடுத்தது, அத்துடன் 70,000கிராமங்கள் 1710 நகரங்களை- யும் அழித்தது. இவ்வழிவுகளுடன் புரட்சியின் தொடக்க காலத்திலிருந்தே ஏகாதிபத்தியங்களால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையும் சோவியத் மக்களுக்கு துன்பத்தின்மேல் துன்பத்தையும் பட்டினியையும் அளித்தது. ஆனால் போற்றப்பட வேண்டியது என்னவென்றால் இவ்வளவு கஸ்டங்களையும் வென்று சோவியத் மக்கள் வெற்றிநடை போட்டு இன்று பசி பட்டினியற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கி, உள்ளனர்.

இன்றைய தலைமுறை நான் மேலே குறிப்பிட்ட கஸ்டங்களில் பீடிக்கப்படாத தலைமுறை, அத்துடன் ஓரளவு 'செல்வத்திலும்' வாழும் தலைமுறை, அத்துடன் சோவியத்யூனியனில் பெரும் பகுதி மக்கள் நகரங்களில் வாழ்கின்றார்கள். அத்துடன் சகலருக்கும் எழுத வாசிக்கத் தெரியும். இத்தலைமுறை/ சமுதாயத்தின் பிரதிபலிப்புத்தான் மிகாயில் கொர்பாச்சோவ்.

அத்துடன் கடந்தகால பொருளாதார மாற்ற நிலை. சோவியத்யூனியனை தனது வல்லரசு ஸ்தாபனத்திற்கே ஆபத்து விளைவிக்க கூடும் எனவும் அதிகாரவர்க்கத்தில் பலர் உணர்ந்தனர். இவை எல்லாவற்றினதும் பிரதிபலிப்புத்தான் இந்த பரஸ்ரோரிகா, கிளாஸ்நோஸ் என்பன.

30%வீதமான புத்திஜீவிகளும் பெரும்பகுதி இளைஞர்களும் இன்று கொர்பச்சோ-



படிப்பகம்

www.padippakam.com

வின் அத்திவாரங்கள். சோவியத்தின் முக்கிய மாற்றம் ஆரம்பத்தில் கலை கலாச்சாரப் பிரிவிலும் பொதுசனத் தொடர்புச்சாதனப்பிரிவிலும் ஏற்பட்டது. பல தடை செய்யப்பட்ட புத்தகங்கள், திரைப்படங்கள், நாடகங்கள், கவிதைகள் வெளிவரத் தொடங்கின. முன்பு ரஸ்சியாவில் லஞ்சஊழல், குற்றம், விபச்சாரம், கொள்ளை, எயிட்ஸ் (AIDS) என்பன இல்லையென்றும் இது முதலாளித்துவத்தின் குறைபாடு என்வும் வர்ணித்துக் கொண்டிருந்த சோவியத்யூனியோன் பத்திரிகைகள் இன்று தமது பேரியை ஏற்றுக் கொண்டு சோவியத்தில் உள்ள ஒக்குறைபாடுகளை நாளுக்கு நாள் வெளிக் கொண்டுவருகின்றன. தொலைக் காட்சியில் ''12மாடி'' என்னும் பிரபலம் வாய்ந்த நிகழ்ச்சி அதிகாரிகளையும், மந்திரிகளையும் நேரடியாக ஸ்ரூடியோவிற்கு அழைத்து கேள்விகளைக் கேட்டு அவர்களை வியக்க வைக்கிறது. அது மாத்திரமல்ல மக்கள் குழுக்கள் அமைத்து அதிகாரிகளின் போக்கைக் கண்டித்து ஆர்பாட்டமும் நடத்துகின்றனர். 87ம் ஆண்டு வரையில் மட்டும் 30,000 அமைப்புக்கள் உருவாகியுள்ளன. அணுச் சாலை எதிர்ப்பு இயக்கம், பெரும் வளர்ச்சியடைந்து வருகிறது. இது ஒருசில இடங்களில் அணுசக்திச்சாலை அமைப்பதையும் தடுத்துள்ளது. அத்துடன் சைபீரியாவிலிருந்துமத்திய ஆசியாவரை கட்டப்பட இருந்த பாரிய நீர்த்தேக்கம் மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

அத்துடன் ரஸ்சியாவில் பல இடதுசாரிகள் அமைப்புக்கள் உருவாகியுள்ளன இவர்கள் மார்க்சியத்தை சுயமாக ஆராயத் தொடங்கியுள்ளனர். (சோசலிச கிளப், பெடரேசன் ஒவ் சோசலிஸ கிளப் என்பன இவற்றில் முக்கியம் வாய்ந்தன) அத்துடன் அபாயகரமான 'பம்யற்' என்ற பாசிசக் கும்பலும் பலம்மடைந்து வருவதை நாம் கவனிக்க வேண்டும்.

சோவியத் யூனியனின் இந்த மாறுசீர்திருத்தமானது குறிப்பாக பின்வரும் பகுதிகளில் உற்பகுத்தியுள்ளது. ஒன்று பொருளாதாரம் டபுல மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது, அரசுக்கும் கம்யூனிஸ் கட்சிக்கும் இடையில் அதிகாரப்பிரிவை ஏற்படுத்தியுள்ளது, அத்துடன் இரகசிய வாக்கெடுப்பு, பலவேட்பாளர்கள் போட்டி, நிதித் துறையில் சீர்திருத்தம், அத்துடன்



படிப்பகம்

www.padippakam.com

51%இரஷ்சியரும், 49%இரஷ்சியர் அல்லாத மக்களும் வாழும் சோவியத் யூனியனில் தேசிய இனப்பிரச்சனையை முன்போல் இரஷ்சிய மேலாதிக்க நிலையில் பார்ப்பதை விடுத்தல்.

கொர்பச்சோவின் இவ் மாற்றத்திற்கு குறிப்பாக இச் சீர்திருத்தத்தால் தமது பதவியையும், சலுகைகளையும் இழக்க விரும்பாத அதிகார வர்கம் எதிர்த்து வருகிறது. அது மாத்திரமல்ல சீர்திருத்த விரும்பிகளுக்குள்ளும் பிளவு ஏற்பட்டுள்ளது. கொர்பச்சோ கூடுதலாக பிற்போக்குவாதியான லிகாச்சேர்வ் கும்பலுக்கு விட்டுக் கொடுப்புக்கள் செய்வதாகவும் அவரின் சீர் அமைப்பு வேகம் போதாதென்றும் பலர் பொறிஸ்யெல்சின் தலைமையில் போர்கொடி தொடுத்துள்ளனர். இது என்ன இருந்தாலும் பொருளாதார மாற்ற அமைப்பு என்ற நிலையில் தனியுடமை, முதலாளித்துவ உறுப்பு, நிதி முறை முதலாளித்துவ சந்தைமுறைகளைப் புகுத்தாமலும், பம்யது போன்ற பாசிசக் கும்பலுக்கு அதிகார வர்கம் தற்போது ஆதரவு வழங்குவன போன்ற வற்றில் இருந்து விடுத்து சோவியத்தில் நிகழும் நிகழ்வுகளுக்கு நாம் பலத்த ஆதரவு வழங்குகின்றோம்.

— ஸ்பாட்டகஸ்

---

## கண்டதும் கேட்டதும்(1)

வாய் மூடி ஊமைகளாக இருந்த எமது மக்கள் தேர்தலில் பங்கு கொள்ள வேண்டும் என்று நாம் எழுதிய போது, புதுமையாக சித்தாந்த வாந்தி எடுத்தவர்களும், குழம்பிய குட்டையில் தூண்டில் போட்டு மேலும் தம்மை குழப்பிக் கொண்டவர்களும்....

ஆசிரியர் தலையங்கம், சிந்தனை 2 ,89

எமது பதில்:- வாந்தி எடுத்தபின் நோயும் தீரலாம், குழம்பிய குட்டையில் மீன் தூண்டிலையும் கவ்வலாம் ஆனல் பொய்கள் எப்படி உண்மையாகலாம்?

---



படிப்பகம்

# வெற்றி சூடும் போராளிகளுக்கு

— வைகறை

திசைகள்
எட்டும்
உம்
திசையிருப்பை
நோக்கி
திரும்புகிறது..

□

வழிநடத்த
வழிபாட்டுடன்
அல்ல ;
வழிநடைப் பாட்டுடன்
அணி வகுப்பைச்
சகிபார்க்கிறோம்.

□

வெறுப்பின்
மீது
நெருப்பை
விதைப்போம்.

□

கசப்பின்மீது
விஷப்பல்
பதிப்போம்.

நம்பிக்கை
விதைகளை
நாட்களில்
விதைக்கிறோம்.

□

நன்றி: 'நதி'

www.padippakam.com

# கொலை அரசியலுக்கு பலியான கலைஞன்



சப்தர் ஹஷ்மி மக்கள் நாடக மேடை (ஜனமஞ்ச) நாடக இயக்குனரும் பாடகரும், ஓவியரும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருமாக இருந்தவர். இவரின் அகால மரணத்தின் போது வயது 34 இவரின் தெருநாடகங்களில் டெல்கி மக்களிடையே பிரபலமானவர். அடக்கு முறைக்கு எதிராக குரல் கொடுத்த மக்களையும் போராட்டங்களுடன் இணைப்பதே இவரின் நோக்கமாக இருந்தது. அவ்வாறே இவரின் நாடகங்களும் அமைந்திருந்தன.

ஒடுக்கப்படும் மக்கள் இவரை மிகவும் நேசித்து வந்தார்கள். டெல்கியில் பல பகிஷ்கரிப்பு 'ஆர்ப்பாட்டங்களும் நடந்துள்ளன' தொழிலாழர்கள் இவரிடம் அதிக நம்பிக்கை வைத்திருந்தார்கள். ரஜீவின் பல ஊழல்களை மக்களுக்கு அம்பலப் படுத்தியவர். காங்கிரஸ்கட்சியினர் இவரை தீர்த்துவிட பல முயற்சிகள் செய்துவந்தனர் இவரது நாடகம் நடந்து கொண்டிருக்கும் போது ரஜீவ் வளர்த்தெடுத்த காங்கிரஸ் குண்டர்களால் மக்கள் முன்னிலையில் தலைபிழக்கப்பட்டு கொடுரமாக கொலை செய்யப் பட்டார்.

இக் கலைஞனின் இக் கொடுரமான கொலை இந்திய மக்களுக்கே பெரும் இழப்பு. இவர் போன்ற கலைஞர்களை அளிப்பதில் எல்லா நாட்டு அரசும் முனைந்து வருகிறது. இவர்கள் போன்றோரை அளித்தால் மக்களின் விழிப் புணர்ச்சியையும் கொன்று விடலாம் என இக் கொடிய அரசுகள் நம்புகின்றன ஆனால் இவர்போல் ஆயிரமாயிரம் கலைஞர்களும், அறிஞர்களும் தோன்றப் போவதை இவர்கள் மறந்துவிடுகிறர்கள்.

சப்தர் ஹஷ்மியின் கொலை பற்றிய உண்மையை மூடிமறைக்க இந்திய அரசு முயன்ற போதும் பிரபல இந்தி நடிகையான ஷப்னா ஆஸ்மி இந்தியத் திரைப்பட விழாவில் இக் கலைஞரை இந்திய காங்கிரஸ் குண்டர்கள் தான் கொன்றார்கள் என்ற உண்மையை கூறி மக்களுக்கும் தெரியப் படுத்தி இந்திய அரசுக்கும் தலையிடியைக் கொடுத்துள்ளார்.

இதே போல் இலங்கையிலும் மக்கள் மக்கள் சக்தி கலைஞர்களை அரசாங்கத்தால் வளர்க்கப்பட்ட குண்டர்களும் பாசிச ஜேவிபியின சில ''விடுதலை இயக்கங்களும்'' கொன்று வருகின்றது. இக் கொலைகாரர்களுக்கு நாம் நினைவு படுத்துவது என்னவென்றால் புரட்சியாளர்களை அழிப்பதன் மூலம் புரட்சியை அழித்து விட முடியாததென்பதே.

—றுக்மினி.

---

## கண்டதும் கேட்டதும் (௨)

.......அத்துடன் தான் விமர்சித்து முடிந்ததும் குமாரசாமி பேனாவை தூக்கி எறிந்தார். அதே போல் பாரதிதாசனும் கோப்பியை எறிந்தார். இப்படியான செய்கைகள் விமர்சனம் என்றால் என்ன என்பதை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்பதையே தெரிவிக்கின்றது:.

—. 'தூண்டில்' கலம். 16. நமது விமர்சனத்தில்

என்ன தூண்டிலாரே எறும்பை எருமையாக்குகிறீர். எதோ பிழைக்கத் தெரிந்து கொண்டு விட்டீர். இலங்கையில் மித்திரனும், ஜேர்மனியில் பில்ட் சைற்றுங்கும் இக்கலையில் உம்மிடம் பிச்சை வாங்க வேண்டும். மேற்படி நீர் குறிப்பிட்ட சம்பவம் இலக்கியச் சந்திப்பு. 3 இல் நடைபெறவில்லை என்றாலும் விமர்சனம் என்ற உமது வரட்டுப் போக்கிற்கு ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

" இலக்கியத்தையும் ஈனக் கொலைகளையும் ஒரே நிலையில் நின்று விமர்சிக்க நாம் தயாராகவில்லை. நாம் வெறும் சடப்பொருளாக மாறி விட்டால் விமர்சனத்தால் பயனேது தோழரே?

--- ---

# சல்மன் ருஸ்டியைப் பாதுகாப்போம்


மிட்நைட் சில்றன் (Midnight's Children) என்ற புகழ்பெற்ற நாவலை எழுதிய சல்மன் ருஸ்டியின் (SALMAN RUSHDIE) சமீப த்திய நாவலான சைத்தானின் செய்யுள் (Satanic Verses) பல முஸ்லீம்களின் கண்டனத்துக்குள்ளாகியதுடன் பல முஸ்லீம் நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் கொலைவெறி பிடித்த கொமெய்னியினால் உலகெங்குமுள்ள முஸ்லீம்களுக்கு ருஸ்டியையும் வெளியீட்டாளரையும் கொலைசெய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். பெருந் சன்மானத் தொகையும் அறிவித்துள்ளார். அத்துடன் ஒரு கொலைகாரப் படையையும் அனுப்பியுள்ளதாக அறியப் படுகிறது. ஒரு பாலஸ்தீன அமைப்பு உட்பட பல தனிப்பட்ட முஸ்லீம்களும் கொமெய்னியின் வேண்டுகோளை நிறைவேற்றத் தயா ரென அறிவித்துள்ளனர்.

நாம் சைத்தானின் செய்யுளை படித்தவர் களல்ல. அதில் கூறப்பட்டவை பற்றியும் எமக்கு தெரியாது. ஆனால் ஒரு எழுத்தாளனுக்கு இதுதான் எழுதவேண்டும் என்று கூறஎவருக்கும் உருமைகிடையாது என்பதிலும், அவனது எழுத்துக்களுக்கு தடைசெய்ய எவருக்கும் உரிமை கிடையாது என்பதிலும் அசைத்தரமான நம்பிகை கொண்டவர்கள். கடந்த கால தமிழகவரலாற்றில் பல கலைஞர் கள் வர்யுறுட்டப்பட்டும், கொலை செய்யப்பட்டும், நாடுகடத்தப் பட்டுமையால் எமது கலாச்சாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு நாம் மறக்கமுடியாது. ருஸ்டியின் நாவலை தடைசெய்துள்ளபல்

www.padippakam.com

நாடுகளின் அரசாங்கங்கள் தமது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார நெருக்கடியை மக்களிடமிருந்து திசைதிருப்பும் முயற்சி இதுவாகும். உதாரணமாக இந்திய முஸ்லீம் மக்களின் வாக்குகளை பெறுவதற்காக ராஜீவ்காந்தியும், பல இடது சாரிகளையும் ஈரானில் சிறுபான்மை மக்களையும், கொன்று குவித்துக் கற்போது தனது அதிகாரத்துக்குள் ஏற்பட்ட பகைபூசல்களை சமாளிப்பதற்காக கொமெய்னியும் இப்புத்தகத்தை தமது அரசியல்லாபத்திற்காக பயன்படுத்துகின்றனர்.

அதுமாத்திரமல்ல மேற்குநாடுகளிலும், அமரிக்காவிலும் உள்ள வலது சாரிகள் இஸ்லாம் சமயத்தினால் மேற்கு கலாச்சாரத்திற்கு பெரும் ஆபத்துவரப்போவதாக மக்களிடையே பீதியை உண்டாக்குகின்றனர். குறிப்பாக இஸ்லாமிய நாடுகளில் இருந்து இங்குவந்து வேலை செய்யும் முஸ்லீம்களுக்கு எதிராக (துருக்கியர், மொறக்கானர், அல்ஜீரியர், வங்கதேசத்தவர், பாலஸ்தீனர்) எதிர்ப்பிரசாரத்தை செய்கின்றனர். ஒரு சில இடதுசாரிகளும் ஒத்து ஊதியுள்ளனர். இஸ்லாமிய மதவெறியின் கொமெய்னியின் கொலைஅறை கூவலையும், புத்தகத்தடையையும் கடுமையாக கண்டிக்கின்றோம்.



— ஸ்பாட்டகஸ்



படிப்பகம்

www.padippakam.com

# யாழ். பல்கலைக்கழகத்தில்

# மீண்டும் ஒரு பலியெடுப்பு!

சென்ற மாசி மாதம் 2ஆம் திகதி காலை 11.00 மணியளவில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அமைதிப் போராட்டத்தில் இந்தியப் படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதில் த. சத்தியேந்திரா, ச. ஜெகநாதன் ஆகிய மாணவர்கள் கொல்லப்பட்டார்கள். மீண்டும் 30.04.89 இல் சி. பிரபாகரன் என்ற மாணவன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இதை ஆட்சேபித்து யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையை இங்கே தருகின்றோம்.

1987 ஒக்ரோபர் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தின் சுமுகமான செயற்பாட்டிற்குக் குந்தகமாக இந்திய இராணுவத்தின் தொடர்ச்சியான நடவடிக்கைகள் அண்மைக்காலமாக உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. எதுவித காரணமும் இல்லாமல் பல்கலைக்கழக மாணவர்களைக் கைது செய்வதில் ஆரம்பமாகிய இந்நடவடிக்கைகள் இன்று மாணவிகளைக்கூட விட்டுவைக்கவில்லை. 29-4-89 அன்று இரவு நேரத்தில் இரு மாணவிகள் உட்பட நான்கு மாணவர்கள் பல்கலைக்கழக சுற்றுடலில் அவர்களது இல்லத்திலேயே வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். வழமை போல இம்மாணவர்கள் கடுமையான சித்திரவதை செய்யப்பட்டதுடன், இரு மாணவிகளும் மின்சார சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக 30-04-89 அன்று கலைப்பீட இறுதி வருட மாணவன் சின்னத்துரை பிரபாகரன் இரவு 7-30 மணியளவில் இராணுவத்தின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் கொக்குவிலில் பலியானார்.

இக்கொலைக்கு நியாயம் கற்பிக்கும் வகையில் இம்மாணவன் புலிகள் இயக்க உறுப்பினர் என்று கூறியது மிகவும் நகைப்பிற்கிடமானது.

இன்றுவரை இந்திய இராணுவத்தின் கொலைவெறிக்கு இலக்கான யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை ஒன்பதாகும். இந்தக் கொலைத்தர்பாரை ஒரு புறத்தில் நடாத்திக் கொண்டு மறு புறத்தில் அமைதியைப் போதிப்பதுதான் "பஞ்சசீலமோ?"

தமிழ் மக்களின் ஒப்புதலற்ற ஓர் ஒப்பந்தத்தைத் தீர்வாகத் திணித்துக் கொண்டு அதை ஏற்கும்படி நாளுக்குநாள் அப்பாவிப் பொதுமக்களை ஆயுத முனையில் துன்புறுத்திப் பணிய வைக்க முயல்வது காந்தியத்தின் வழிகாட்டலா?

இவ்வகையில் பல்கலைக்கழக மாணவர்களின் குரல்வளைகள் நெரிக்கப்படும் போதும், அப்பாவிப் பொது மக்கள் துன்புறுத்தப்படும் போதும், தமிழ் மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதாக கூறிக்கொள்வோர் பார்த்துக்கொண்டிருப்பது விசித்திரமானது.

காலத்திற்குக் காலம் இவ்வாறான செயல்களை நிறுத்தும்படி கோரிக்கைகள் விடப்பட்ட போதும் அவற்றைப் பொருட்படுத்தாது நடவடிக்கைகள் தொடர்வது வருந்தத்தக்கது. தமிழ் மக்களின் அபிலாசைகளுக்குப் புறம்பாக எந்தவொரு தீர்வையும் திணிக்க முயல்வது நிரந்தர அமைதிக்கு வழிவகுக்காது.

www.padippakam.com

# தென் ஆப்பிரிக்கா

தென் ஆப்பிரிக்க இன வெறி அரசானது உலகிலுள்ள எல்லா அரசுகளையும் விடமிகவும் மிலேச்சத்தனமான APARTHEID என்னும் இனவெறிக் கொள்கையை தனது அரசியல் சாசனத்தில் கொண்டுள்ளது. இக் கொள்கை ஹிட்லரின் பாசிசக் கொள்கையிலிருந்து உருவாக்கப்பட்டதாகும். மூலவளம் நிறைந்த இந் நாட்டை வெள்ளை முதலாளிகள் சுரண்டுவதற்கு இக் கொள்கை மிகவும் ஏதுவாக உள்ளது. அத்துடன் கறுப்பின தொழிலாளர்களின் உழைப்பை மிக மிலேச்சத்தனமாகச் சுரண்டுவதற்கும், கறுப்பின மக்களை அவர்களின் பூர்வீக நிலங்களிலிருந்து வளமற்ற பிரதேசங்களுக்கு விரட்டி, நாட்டின் மூலவளங்களைச் சுரண்டுவதற்கும் இக் கொள்கை பயன்படுகிறது. இன்று பல்வேறு இயக்கங்களும் ' தாபனங்களும் இவ் அரசுக்கு எதிராக போர்க்கொடி தொடுத்துள்ளன. அத்துடன் சில இயக்கங்கள் APATHEID தொடர்ந்தும் நீடித்திருந்தால் அது ஒரு சோசலிசப் புரட்சிக்கு வித்தாகி விடும் எனப் பயந்து இவ் இனவெறி முதலாளித்துவத்தை சீர்திருத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளன. இவ் இயக்கங்களையும் தென் ஆப்பிரிக்காவின் வரலாற்றையும் ஆராய்வதே எமது நோக்கமாகும்.

ஐரோப்பியர் இந்தியாவுடன் கடல் மார்க்கமாகத் தொடர்பு கொண்டதிலிருந்து தென் ஆப்பிர்க்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் தொடர்பு ஏற்பட்டிருந்தது. ஆனால் 1652 லிருந்துதான் இங்கு வெள்ளையர் குடியேற்றங்கள் ஆரம்பமாயின. முதலில் ஒல்லாந்தரும் பின் ஆங்கிலேயரும் குடியேறத் தொடங்கினர். அன்றிலிருந்துதான் தென் ஆப்பிரிக்காவின் பூர்வீக மக்களுக்கு அழிவு ஏற்படத் தொடங்கியது. வெள்ளையர் வருகைக்கு முன் தென் ஆப்பிரிக்காவில் பல் வேறு இனத்தவர்கள் வாழ்ந்தார்கள். இவர்கள் வெள்ளையரின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மிகவும் தீவிரமாகப் போராடினார்கள். குறிப்பாக 'சக்கா' (TSCHAKA) என்ற தலைவன் தலைமையில் வெற்றியும் கண்டனர். ஆப்பிரிக்கரை இராணுவ ரீதியில் அடக்க முடியாத வெள்ளையர்கள், தாம் கைப்பற்றிய எல்லா நாடுகளிலும் கையாண்ட யுக்தியை இங்கும் கையாண்டனர். அதாவது இங்கு வாழ்ந்த பல்வேறு இனங்களை சூழ்ச்சியின் மூலம் ஒன்றுடன் ஒன்று மோதவிட்டார்கள். இதனால் வெள்ளையருக்கெதிரான ஆப்பிரிக்காவின் ஒன்றிணைந்த

போராட்டம் மழுங்கடிக்கப் பட்டது. இறுதியில் எங்கும் போல வெள்ளையர் இங்கும் வெற்றி கண்டனர்.

குடியேறிய வெள்ளையரில் ஒல்லாந்த தேசத்தவரும் ஆங்கிலேயரும் அடங்குவர். முன்னையவரை பொயர் புறென் (BOER/BUREN) என அழைப்பர். இவர்கள் ஆரம்பத்தில் மந்தை வளர்ப்பிலும் பின் பெருந் தோட்டத்திலும் குறிப்பாக கரும்புத் தோட்டத்திலும் ஈடுபட்டனர். வழக்கம் போல, எங்கெல்லாம் காலனித்துவ வாதிகள் பெருந் தோட்டங்களை ஆரம்பிக்கிறார்களோ அப்போதெல்லாம் இந்தியத் தொழிலாளருக்கு 'நாடுகடத்தல்' தான். 1860ல் இருந்து தென் ஆப்பிரிக்க கரும்புத் தோட்டங்களுக்கு இந்தியர்கள் கூலியாகக் கொண்டு வரப்பட்டனர்.

1883ல் தென் ஆப்பிரிக்காவில் தங்கம், வைரம் போன்ற மூலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இத் தொழில்களில் குறிப்பாக ஆங்கிலேயரே ஈடுபட்டனர். நிலச் சுரங்கங்கள் பெருகப் பெருக ஆங்கிலேயருக்கும் மற்றும் குறிப்பாக பெருந்தோட்டத்தையும் மந்தை வளர்ப்பையும் முதன்மையாகக் கொண்ட ஒல்லாந்த தேச குடியேற்ற வாசிகளான BOER/BUREN க்கும் போர் மூண்டது. (1899-1902). இறுதியில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். 1910ல் தென்னாபிரிக்கா குடியரசானது.

## தென்னாபிரிக்க மக்கள்

இன்று தென்னாபிரிக்காவில் பல் வேறு இனத்தவர்கள் வாழ்கிறார்கள். அத்துடன் பல்வேறு மொழியும் பேசப் படுகிறது. இன்றிங்கு

கறுப்பு ஆப்பிரிக்கர் -- 71.2 வீதம்,
வெள்ளையர் -- 16.7 வீதம்,
கலப்பு இனத்தவர் -- 9.3 வீதம்,
ஆசியர்கள் -- 2.8 வீதமும்

வாழ்கிறார்கள்.

அத்துடன் கறுப்பு ஆப்பிரிக்கர்களிலும் பல் வேறு இன மொழியைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். சூலு எனும் மொழி பேசும் சூலு (SULU) கோசா (HOSA), ஸ்வாசி (ZWAZI) என்ற இனத்தவரும், ந்சோங்கா எனும் மொழி பேசும் வெண்டா (VENDA) இனத்தவரும், சோதோ (SOTHO) என்ற மொழி பேசும் ந்ஸ்வானா (TSWANA) என்ற இனத்தவரும் அடங்குவர். வெள்ளையர்களின் பெரும்பான்மையோர் ஆப்பிரிக்கான் (AFRIKANS)

www.padippakam.com

என்றும் ஜேர்மனையும் டச்சு(DUTSCH)மொழியையும் கலந்த ஒரு மொழியையும், ஆங்கிலத்தையும் பேசுவர். மற்றும் கலப்பு இனத்தவர் ஆப்பிரிக்கான் மொழியையும் ஆசியர்கள் ஆங்கிலத்தையும் பேசுவர்.

அடக்குமுறை

1913ல் 87%மான நிலம் வெள்ளையருக்குச் சொந்தமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. இங்கிருந்தவர்கள் நிலமற்ற தொழிலாளர் ஆக்கப்பட்டு அவர்கள் அனைவரும் வெள்ளையருக்குக் கூலி வேலை செய்ய வேண்டியவர்கள் ஆக்கப் பட்டார்கள். அதாவது உழைப்பை விற்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அது மாத்திர மல்லாமல் வெள்ளை நிற வெறி அரசாங்கமானது நல்ல வளம் கொண்ட பகுதிகளை யெல்லாம் அபகரித்துக் கொண்டு அங்கு வாழ்ந்த கறுப்பர்களை வளமற்ற பகுதிகளில் பலாத்காரமாகக் குடியமர்த்தியது; குடியேற்றப் பகுதிகளுக்கு (HOMELAND) 'சொந்தநாடு' எனப் பிரகடனப் படுத்தி, அது தென் ஆப்பிரிக்காவிலிருந்து 'சுதந்திர மானது என நாடகமாடியது.

16.7% மான வெள்ளையர் 87% மான நிலப் பரப்பை அபகரித்துக் கொண்டு 12% மான நிலப் பரப்பை 71% மான கறுப்பு ஆப்பிரிக்கர்களுக்கு ஒதுக்கினர். இதன் விளைவு வறுமை, நோய் இம்மக்களைப் பிடித்துக் கொண்டது. அத்துடன் 46.4% மான ஆப்பிரிக்கர் HOMELAND எனும் பகுதியில் நெருக்கமாகவும் 24.3% ஆப்பிரிக்கர்கள் வெள்ளையர் வாழும் நாட்டுப் பகுதியிலும் (தோட்டத் தொழிலாளர்களாக ), 29.3% மான ஆப்பிரிக்கர்கள் வெள்ளையர் வாழும் நகரப் பகுதிகளிலும் (நகர சுத்திகரிப்பு, உணவகம்) வேலை செய்கின்றனர்.

இங்கு கறுப்பருக்கு வாக்குரிமை கூட மறுக்கப் பட்டுள்ளது. அத்துடன் வெள்ளையருக்கு எனத் தனியாக பேருந்து, பூரா சாலை, சிற்றுண்டிச்சாலை, பூங்கா, கோயில் போன்றவை உள்ளன.

இங்கு கறுப்பர் நுழைந்தால் தண்டிக்கப்படுவர். கலப்புத் திருமணம் தடை செய்யப்பட்ட ஒன்று. ஒரு குறிப்பிட்ட தொழில்கள் வெள்ளையருக்கு மாத்திரமே ஒதுக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட தொழில்கள் கறுப்பருக்கு மாத்திரமென குறிக்கப் பட்டுள்ளது. 1974ம் ஆண்டு வரையும் கறுப்புத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையும் மறுக்கப்பட்டது. அத்துடன் ஒரு வெள்ளைத் தொழிலாளிக்கு கறுப்புத் தொழிலாளியையும் விட 6மடங்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. கறுப்பர் வாழும் பகுதிகளில் பாடசாலைகள் அதிகம் இல்லாததுடன் அவை ஒரு குறிப்பிட்ட அளவு வகுப்புகள் மட்டுமே உள்ளன. அத்துடன்



படிப்பகம்

www.padippakam.com

கறுப்பர் வாழும் பகுதிகளில் சுகாதார வசதியும் மிக மோசமானதாகும். குறிப்பாக 400 வெள்ளையருக்கு ஒரு வைத்தியர் உள்ளனர். ஆனால் 44000 கறுப்பருக்கு ஒரு வைத்தியர் உள்ளார். அத்துடன் இவர்கள் வாழும் பகுதியும் சுகாதார வசதி குறைவானதாகையால் பலர் காச நோய் போன்ற பல கொடூர நோய்களுக்கு உள்ளாகி இளம் வயதிலேயே மரணத்தை தழுவுகின்றனர். இது வெள்ளையரசாங்கத்தின் திட்டமிட்ட கொலை என்றுதான் கூற வேண்டும்.

நான் மேற் குறிப்பிட்டது தென்னாபிரிக்க வெள்ளை இன வெறி அரசால் கறுப்பு இனமக்கள் மேல் திணிக்கப் படுகின்ற அடக்குமுறைகளில் சிலவற்றையே. கறுப்பின மக்கள் இக் கொடிய அரசால் அனுபவிக்கும் துன்பம் சொல்லில் அடங்கா. இவ் அடக்குமுறைகளை எதிர்த்து பல்வேறு போராட்டங்கள் இம்மக்களால் மேற் கொள்ளப்பட்டது. மகாத்மா காந்தி இங்கிருந்த காலத்தில் (1893 - 1914) இவ்வின வெறி அரசுக் கெதிராகப் போராடினார். கறுப்பு இனத்தவர் போராட எழுந்தபோதெல்லாம் தென்னாபிரிக்க இன வெறியரசு மிலேச்சத்தனமான முறையில் அடக்கியது. அத்துடன் கறுப்பின எழுச்சியை பல்வேறு படுகொலைகள் மூலம் மழுங்கச் செய்தது. 1921ல் புல்கோக் படுகொலை (BULHOEK - MASSACRE) தொடக்கம் ஷார்பெவில்லா படுகொலை (SHARPEVILLE MASSACRE) என நீண்டு கொண்டே போகும் இவர்களின் கொலை வெறி. அத்துடன் ANC யின் தலைவரும் கறுப்பு ஆபிரிக்க மக்களின் விடுதலையின் சின்னமான நெல்சன் மண்டேலாவை 26 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வைத்து வாட்டுகிறது. ஸ்ரிவ் பிகோ (STEVE BIKO), கவிஞர் மேலசிக் கொலை செய்தது. புரட்சியாளர்களைக் கொல்வதன் மூலம் புரட்சியை அழிக்க முடியாது என்பது போல இன்று கறுப்பின மக்கள் பலம் கொண்டு இன வெறி அரசுக் கெதிராக போராட்டத்தை தொடுத்துள்ளனர்.

## இன வெறி எதிர்ப்பு போராட்ட இயக்கங்கள்

தென் ஆப்பிரிக்க விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு இயக்கங்களும் ஸ்தாபனங்களும் தோன்றின. பல மடிந்தன. பல பலம் பெற்று இன்று இனவெறி அரசுக்கு சவாலாக வளர்ந்துள்ளன. அது மாத்திரமல்ல தொழில் வளர்ச்சியடைந்த தென்னாப்பிரிக்க இன வெறியரசு தோழர் கார்ல் மார்க்ஸ் சொன்ன படியே தனக்கு புதை குழி தோண்டுபவர்களையும் உண்டாக்கியது. அதுதான் தென்னாப்பிரிக்க தொழிலாளர்கள். ஆனால் இன்று இத் தென்னாப்பிரிக்க அரசு கறுப்பு, வெள்ளை தொழிலாளர்களை மிகவும் சூழ்ச்சிகரமான முறையில் பிரித்து வைத்திருக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

இருந்தும் சில வெள்ளையர்களும், தொழிற்சங்கம் தொழிலாள இயக்கங்களி-லும் பங்குபற்றுகிறார்கள். பல்வேறு சிறு தொழிற்சங்கங்களாக வளர்ந்த

தொழிற்சங்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்த ஒரு கூட்டு அமைப்பு (COSATU) — CONGRESS OF SOUTH AFRICAN TRADE UNIONS
ஒன்றை ஏற்படுத்தி நிற வெறி அரசுக்கு தலையிடியைக் கொடுத்து வருகிறது.

இனவெறிக்கு எதிராகப் போராடும் மற்று-மொரு அமைப்புதான் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் ( ANC ). இது 1912ல் ஆரம்பிக்கப் பட்டது. முதலில் மகாத்மா காந்தியின் அகிம்சா வழியைப் பின்பற்றியது. ஆனால் இனவெறி அரசுக்கு எதிராக அகிம்சைப் போராட்டம் பயனற்றது என அறிந்த பின் ஆயுதப் போராட்ட வழிகளையும் இது கையாண்டது. இது ஒரு தடை செய்யப்பட்ட இயக்கமாகும். 1963ல் இருந்து இவ் இயக்கத்தின் தலைவர் மண்டேலா இனவெறிச் சிறையில் அடைக்-கப் பட்டுள்ளார். இதன் முனை இயக்கமாக இன்று ஐக்கிய தேசிய முன்னணி (UNITED DEMOCRATIC FRONT ) வளர்ந்துள்ளது. இது 1983ல் ஆரம்பிக்கப் பட்டது.

இன்று தென்னாப்பிரிக்க இனவெறி அரசுக்கு எதிராகும் அமைப்புகளில் மிகவும் முக்கியமானது அசாபோ (AZAPO) என்னும் அமைப்பாகும். இது 1978ல் அமைப்பாகும். சோசலிசப் புரட்சியை தனது குறிக்கோளாகக் கொண்டது.

இது 1978 ல் அமைக்கப் பட்டது. சோசலிசப் புரட்சியைத் தனது குறிக்கோளாகக் கொண்டது. கறுப்பர் இனவிடுதலை ஒரு சோசலிசப் புரட்சி மூலமே காண முடியும் என்பது இவர்களது கொள்கை. அத்துடன் வெளிநாட்டில் பல்வேறு முதலாளித்துவ அரசுடனும் அதன் பிரதிநிதிகளுடனும் ஆப்பிரிக்க முதலாளிகளுடனும் ANC பேச்சு வார்த்தை நடத்துவதையும் இவர்கள் எதிர்க்கிறார்கள். இவர்களின் இன-வெறிச் சிறையில் கொலை செய்யப்பட்ட மாணவர் தலைவனான ஸ்ரேவ் பிகோ (STEVE BIKO )வின் கொள்கையில் இருந்து பிறந்தது. ஆனால் இவர்களது கொள்கையில் எல்லா வெள்ளையரையும் அடக்குமுறையாளராகப் பார்க்கும் தவறான கொள்கை உள்ளது போல் தெரிகிறது.

இவற்றையும் விட பல்வேறு இயக்கங்களும் தொழிற் சங்கங்களும் இந்த இனவெறிக்கு எதிராகப் போராட்டத்தை, தொடர்ந்துள்ளன. மிக விரைவில் இவர்கள் இவ் இனவெறி அரசை மண்கவ்வச் செய்து போராட்டத்தை வெற்றியடைய செய்வார்கள் என்பது எமது நம்பிக்கை.



படிப்பகம்

www.padippakam.com

ஆசிரியர்
'புதுமை'

இத்துடன் ஒரு சிறுகதை அனுப்பியுள்ளேன், புதுமையில் வெளியிடு. இத்தகைய படைப்புகளை வெளியிட இங்கு பத்திரிகைகள் சஞ்சிகைகள் முன்வரா. எனவே தயவு செய்து பிரசுரித்து இங்குள்ள நிலையை வெளிநாட்டவருக்கும் தெரியத் தரவும்.

எஸ். பி. கே—

சாவகச்சேரி

# ஒரு போராளியைத் தேடி...

— எஸ். பி. கே.

அதிகாலை மூன்று மணிக்கு வந்தார்கள். தெருப் படலையை உதைத்து விழுத்திவிட்டு கதவைத் தட்டினார்கள். ஏ...ஏ...வா வெளியே... என்றார்கள். எழுந்து கண்களைத் தடவியபடி கதவைத் திறந்தேன். காக்கி உடை, கையில் சுடுபடைக் கலன்களுடன் பத்துப்பேர்வரை....

ஹான்ஸ்சப்....'' என்றான் ஒருவன்..

நான், மனைவி, மகன் ஒருவன்.

கைகளை உயர்த்தினோம்.

தள்ளிக்கொண்டுபோய், முன்னறையை உதைத்துத் திறந்து எங்களை உள்ளே இருக்கவிட்டு, கைகளைப் பின்னால் பிணைத்துக் கட்டி.... வாசலில் ஒருவர் காவல் இருந்தனர்.

எங்கே உன் மகன்...?'' தடித்த மீசையன் கேட்டான்

''எந்த மகன்.....?''

''அதுதான் புலி...புலி....''

''தெரியாது..., அவன்போய் நான்காண்டுகள் ஆயின... இதையெல்லாம் கொமாண்டரிடம் சொல்லிவிட்டேன்.

''எப்ப....''

''எங்களைக் கட்டிப் போய் மூன்று நாட்கள் வைத்திருந்து விசாரித்தீர்களே....திரும்பவும் அதே கேள்வியைக் கேட்டால்....?

''அப்படியா...?

www.padippakam.com

''ஓ...எங்களைக் கைதுசெய்து, விசாரித்து விடுதலை செய்த தாக, மேஜர் கொடுத்த சேட்டிபிக்கட் இருக்கு என்று கூறி அதோ என்று மேசையை சுட்டிக் காட்டினேன் கண்களால். ஒருவன் அதை எடுத்துப் படித்தான். வந்து கதிரையில் அமர்ந்தான்.

ஏதோ ஹிந்தியில் கதைத்தான்.

அதை செவிமடுத்த மற்றொருவன் வெளியே விரைந்தான்.

சில நிமிடங்கள் அமைதி.

போனவன் மற்றொருவனுடன் திரும்பிரும்பிவந்தான்.

அவன் என்னிடம் ஆங்கிலத்தில் பேசினான். எங்களைக் கூட்டிச் சென்று மூன்று நாட்கள் முகாமில் வைத்து விசாரித்த பின் விடுதலை செய்ததையும், அதே மூன்று நாட்கள் எமது வீட்டில் அவர்கள் குடியிருந்ததையும் மள. மளவென்று கூறி முடித்தேன்

''ஓ...சொறி... ..போர் ரபிளிங் யூ...'' என்றான் அந்த அதிகாரி. தொடர்ந்து ஏதோ ஹிந்தியில் மற்றவர்களுடன். பேசினான்.

ஒருவன் ஓடிவந்து எங்கள் கைக் கட்டுகளை அவிழ்த்துவிட்டான்.

போய்விட்டார்கள்.

அமைதிகாக்க வந்தவர்கள் அமைதியைக் குலைக்கிறார்கள்

இரவு வேளைகளிலும் வந்து வீட்டைச் சுற்றி நிற்கிறார்கள். கதவை உதைக் கிறார்கள். வா வெளியே என்று சத்தம் இடுகிறார்கள்.

மறுநாட்காலை

நித்திரைவிட்டெழுந்து முற்றத்தில் நின்றேன். இரண்டு வாகனங் களில் ஐம்பது பேர்வரை வந்து 'தொப், தொப்'பென்று குதித்தார்கள் சுடுபடைக் கலன்களை நீட்டியபடி வீட்டைச் சுற்றி ஓடினார்கள்.

ஒருவன் என்னைக் குறிபார்த்தான்.

எல்லாம் வா வெளியே' என்றான் மற்றொருவன்

முற்றத்தில் வந்து நின்றோம்,

எங்களைச் சுற்றி பத்து பதினைந்து பேர்

'ஹான்சப்' என்றான் தலைப்பாக்காரன்.

கைகளை உயர்த்தினோம்.

தோளிலிருந்து கால்வரை உருவிப்பார்த்தார்கள். கைக்குண்டு இருக்கிறதா என்று சோதிக்கிறார்களாம்....

மனைவி இரவு உடையுடன் நின்றாள்

அவளின் மேனியிலும்.....கைவைத்து

'தாடி' ஒருவன் உருவிப்பார்த்தான்.

'ஒரு அன்னியன் என் உடம்பைத்தொடுவதற்கும் காலம் வந்துவிட்டதே...'. என்று கவலைப்பட்டாள்.



படிப்பகம்

'என்ன... ? வட்ஸ் ஹூ செயிங்... ? என்று கேட்டான் சோதித்தவன். 'இந்தப் எங்கேஸ்ட் அவர் கவ்சர்.. ' என்றேன் சுருக்கமாக.

'வாட்.... ??

'ரச்சிங் அனதர் மேல் வைவ்.... ?

அவன் என்னை முழுசிப்பார்த்துவிட்டு மௌனமானான். அவன் முன்னால் வந்த மற்றொருவனைப் பார்த்து சல்யூட்டடித்தான்'

வந்தவன் ஒரு மெஜர்.

மெஜர் என்னுடன் ஆங்கிலத்தில் பேசினான். உங்கள் மகனை விசாரிக்க வேண்டும் என்றான்; அவன்.

பதினாறு வயதான மதியளகனின் கைகளை வெள்ளை நூல் ஒன்றால் கட்டினான். ஒருவன். அவனைத்தான் விசாரித்து முடிந்ததே...திரும்பவும் ஏன்? என்று கேட்டேன்.

விசாரணை முடியவில்லை.... என்றான் மேஜர்.

'சரி நட' என்று அவனைத் தள்ளிக் கொண்டு போனான் ஒரு ஜவான். அவனைத் தனிய விட முடியாது... நானும் வருகிறேன்

நீ கொஞ்ச நேரம் நின்று பின்னால் வா என்றான் ஒரு தமிழன். நெஞ்சம் சிறிது குளிர்ந்தது. அவர்கள் அவனை ட்ரக்கில் ஏற்றினார்கள். வர்கள் அங்கிருந்து சென்ற பிறகு , சைக்கிளை எடுத்துக் கொண்டு அந்த முகாம் நோக்கி விரைந்தேன்

அவர்கள் முகாமுக்குள் நுழையவும் நான் கொமாண்டர் அறையில் புகுந்தேன். ''குட் மோர்னிங் சார்.. ''

''குட் மோர்னிங்... ''

''தேஹ் ஹாவ் புரோட் மை சன் எகெயின்.... ? ''

''யெஸ் ஐ நோ... ''

'' உறி இஸ் ஒல்ரெடி இன்ரறகேற்றெட்... ''

''பட்.. கொமாண்டர் வான்ற்ஸ் ஹிம்... ''

மதியளகன் எனது கண்முன்னே ஜீப்பில் ஏற்றப்பட்டான். சைக்கிளை எடுத்துக் கொண்டு சாவச்சேரி மெயின் கேம்ப் நோக்கி ஓடினேன். அங்கே முகாமிலிருந்த மேஜரிடம் எற்கனவே எங்கள் மீளாய்வு செய்தவர்- விசாரித்து விடுதலை கேட்கிறேன். 'தே ஹாவ் அரஸ்ரெட் மை சன் எகெயின்.... ??

'யெஸ்...ஐ நோ...ஐ வான்ற் டு நியெத்ரிமன்ட் ஹிம்.... உறி வில் பி றிலீஸ்ட் ருமோரோ..... '

'ஷால் ஐ கம் ஒன் த மோர்னிங் ருமோரோ.. ?

'யெஸ் யூ கேன் ரேக் உறிம் ருமாரோ... '

'தாங் யூ.... '

www.padippakam.com

மறுநாட் காலை பத்து மணிபோல் முகாம் போயிருந்தேன்.
மேஜர் தமிழ் பேசினார்.
உட்காருங்க என்றார்.
உள்ளம் மகிழ்ந்தது.
சிறிது நேரத்தின் பின் உங்கள் மகன் பெயரென்ன என்று கேட்டார்,

மதியழகன் என்றேன். அருகில் இருந்த காக்கியிடம் ஏதோ தம் மொழியில் சொன்னார். அவன் போய் என் மகனை அழைத்து வந்தார்கள் அவன் கையில் வெள்ளைக் கயிறு இருந்தது. மறு தலைப்பு காக்கியின் கையில் இருந்தது. மேஜர் முன் வந்ததும் கயிற்றை அவிழ்த்து சுதந்திரமாக்கினான்

'ஐ வான்ற எ செட்டிபிக்கட் சார்...
செயிங் தற் உறி இஸ் றிலீஸ்ட் ...'
'யேஸ் ஐ வில் கிவ் யூ...'

'கிருஷ்ண குமார் மதியழகன் வாஸ் ரேக்கின் இன்ரு கஸ்ரடி ஃபோர் இன்ரரகேஷன், ஃபவுண்ட இன்னசென்ற் அன்ட் றிலீஸ்ட்' என்று எழுதிக் கொடுத்தார்.

'படிக்க வேண்டிய பிள்ளைகளெல்லாம் இப்படிப் பயங்கர வேலைகளில் ஈடுபடலாமா..? பெற்றோர் கவனம் எடுக்க வேண்டும்...' இவ்வகையில் புத்திமதி சொல்லிக் கொண்டிருந்தார் மேஜர்.

மதியழகன் என்னருகே வந்து நின்றபோது அவர்,
வீ டோன்ற் உறாம் எனிவன்... வீ டோன்ற் ரோற்சர் .... ஆஸ்க் ஹிம் வெதர் உறி இஸ் உறாம்ட்...? என்று சொன்னார்.

உனக்கு அடித்தார்களா என்று அவனைப் பார்த்துக் கேட்டேன்.

இல்லை'யென்று தலையசைத்தான், ஆனால் அவன் முகத்தில் படிந்திருந்த கவலை ரேகைகள் அது உண்மையல்ல என்று சொல்வது போல் தோன்றின.
ஓல் றைற் யூ கேன் கோ...என்றார் மேஜர்
தாங்யூ என்றேன்.

மகனைக் கூட்டிக் கொண்டு வெளியேறினேன். தெருவில் வந்ததும் அவன் சொன்னான்:

'அப்பா எனக்கு அந்த மீசையன் அடித்தான், யாருக்கும் சொன்னால் சுட்டுப் போடுவேன் என்றான் அவங்களுக்கு எங்கள் வீடு தெரியும் இல்லையா?' உளம் ஒன்று புறம் வேறு ...யாரிடம் முறையிடுவது... ?யாருக்கும் நாங்கள் அடிப்பதில்லை என்று மேஜர் சொன்னாரே....பெருமூச்சு விடுவதைத் தவிர வேறென்னைச் செய்ய முடியும்? மகனை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வீடு திரும்பினேன்



படிப்பகம்

www.padippakam.com

அடுத்தநாள் காலை நன்றாகப் பொழுது புலரவில்லை, நாய்கள் குலைத்தன தெருவில் ஹிந்திப்பாடல்கள் கேட்டன. ஆறுமணிக்கு முன் வீடுகள் சோதனையிடப் போகக்கூடாதென்ற நிபந்தனை நடைமுறைக்கு வந்த நாள்.

ஆறுமணியடித்ததும் தெருப்படலையை உதைத்து விட்டு வந்தார்கள். கதவைத் தட்டினார்கள். வா வெளியே என்றார்கள் நாம் வெளியில் வந்ததும் அவர்கள் உள்ளே சென்றார்கள், அறைக் கதவைத் திறக்கச்சொன்னார்கள். அவை திறந்தே கிடக்கின்றன என்றேன் எல்லா அறைகளையும் தமது சப்பாத்துக்கால்களால் சென்று சோதித்தார்கள்.

போய்விட்டார்கள்.

இது தொடர் கதை இந்த வீட்டை யாருக்காவது வாடகைக்கு கொடுத்துவிட்டு வேறெங்கேயாவது போய் இருப்பம்.... இங்கே இரவில் நிம்மதியாய் நித்திரை கொள்ளவும் முடியுதில்லை...... இதெல்லாம் இப்போதைக்கு தீர்ந்து போகிற பிரச்சனையல்ல என்றாள் மனைவி, ஒருநாள் மறப்பதற்கு என்ன காரணம் சொல்ல முடியும்!

வீட்டில் என்ன இருக்கிறது மூட்டை கட்ட?

எல்லாம் தான் அவர்கள் முகாமிட்டு இருந்த போது பாவித்து உடைத்தெறிந்து தமக்குத்தேவையானவற்றையும் எடுத்துக் கொண்டு போய் விட்டனரே! மிதியில் அகப்பட்டதை அயலவர் எடுத்துக் கொண்டனர். எஞ்சிய சில உடைசல்களை மூட்டை கட்டி இரு கைகளிலும் தூக்கிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினோம் அகதிகளாக:

---

## கண்டதும் கேட்டதும் (3).

.....நிகழ்ச்சி ஆரம்பத்திலிருந்து நடப்பவற்றை வீடியோ பதிவு செய்து கொண்டிருப்பதை தூண்டில் ஆசிரியர் குழுவினர் கண்டித்தனர். இப்படி பதிவு செய்து பிரச்சாரம் செய்வதையோ விற்பனைக்கு அனுப்புவதையோ விரும்பவில்லை எனத் தெரிவித்தனர்......

—இலக்கியச் சந்திப்பு. (ஜோசப்-)
தூண்டில். கலம். 16

அது சரி, இக் கசற்றுகளை விற்பனை செய்வதற்கு சிறிசேனவும் கமலகாசனுமா வந்திருந்தார்கள்?



படிப்பகம்

என்னுடைய மார்க்ஸ் உன்னுடைய மார்க்ஸின்
தாடியைப் பிய்த்து விடுவான்
என்னுடைய எங்கெல்ஸ் உன்னுடைய எங்கெல்ஸின்
பற்களை உடைப்பான்
என்னுடைய லெனின் உன்னுடைய லெனினின்
எல்லா எலும்புகளையும் நொருக்குவான்
எங்களுடைய ஸ்ராலின் உங்களுடைய ஸ்ராலினின்
கழுத்தாங் குத்தியில் சூடு போடுவான்
எங்களுடைய ற்றொற்ஸ்கி உங்களுடைய ற்றொற்ஸ்கியின்
மண்டை ஓட்டினைப் பிளப்பான்
எங்களுடைய மாவோ உங்களுடைய மாவோவை
*யங்ஸ்ரயில் அமிழ்த்துவான்
இதனால் இவன் வெற்றியின் பாதையில்
இனிமேலும் குறுக்கே வராதிருக்க.

..................

*யங்ஸ்ரே - சீனாவில் இருக்கும் ஒரு நதி

Heinrich Heine, Bertolt Brecht, Kurt-Tucholsy என்ற ஜேர்மன் மொழி தந்த கவிஞர் வரிசையில் அடுத்த இடம் பெறுபவர்தான் அண்மையில் காலம் சென்ற (1988) (எரிக் பிரிட்) Erich Fried என்ற கவிஞராவார். யூத இனத்தைச் சேர்ந்த இவர் கிட்லரின் ஆஸ்திரிய ஆக்கிரமிப்பால் 1939ல் லண்டன் சென்று குடியேறினர். இவரின் கவிதைகளில் ஒன்றை தோழர் சுசீந்திரன் அருமையாக மொழி பெயர்த்துள்ளார். இதை பிரசுரிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

www.padippakam.com

# ஒரு அகதியின் அனுபவம்

— சந்திரா

சென்ற இதழின் தொடர்ச்சி:....

எல்லோரும் நம்பிக்கையிழந்த நிலையில் ஏஜண்டுகளின் சில்லு முல்லுக்களை விபரிக்க தொடங்கினார்கள். துளசி தனிமையில் சிந்தித்துக்-கொண்டிருந்தாள். அரைமணித்தியாலத்தின் பின் ஒருவர் வந்து நீங்கள் தான் அவர் அனுப்பிய ஆட்களா என்றார். முதலில் அவர்கள் நம்ப மறுத்தாலும் பின் அவர்களின் ஏஜண்டின் பெயர் விபரங்கள் கூறியதால் அவருடன் இவர்கள் சென்றார்கள். அவர்களை கூட்டிச் சென்றவர் ஒரு மலிவான கோட்டலில் ஒரு அறையெடுத்து எல்லோரையும் அதற்குள் தள்ளிவிட்டு சென்றுவிட்டார்கள். துளசியைத் தவிர மற்றை-யோர் முதலிலேயே பரிட்சியமானவர்கள் ஆதலால் கவலைகளை மறந்து சிரித்துக்கதைத்து கொண்டிருந்தார்கள். துளசியால் அப்படி இருக்கமுடியவில்லை. இரவு போல் அவர்களது ஏஜண்வந்து நாளை எல்லொருக்கும் ரிக்கற் ஓகே பண்ணியுள்ளதாக கூறியதால் எல்லொரும் உற்சாகமடைந்தார்கள். அடுத்தநாள் ஆவலுடன் விமான நிலையம் சென்ற இவர்களிடம் திடிரென இவர்களின் கடவைச் சீட்டுக்கள் வாங்கப்பட்டு கோட்டலுக்கு திருப்பி அனுப்பப் பட்டார்கள். எல்லோரும் திடுக்கிட்டனர். என்ன நடந்ததென்று அவர்களால் சிந்திக்கமுடியவில்லை ஏஜண்டுகள் சி.ஐ.டி நிற்பதாகவும் இன்று போகமுடியாது என்றும் எதோ தமக்குள் கதைத்துக்கொண்டிருந்தது துளசியின்காதுகளில் விழவில்லை. அவளை பயம் பற்றிக்கொண்டது முன்அவள் கேள்விப்பட்ட

பயங்கரமான கதைகள் அவள் நினைவில் வந்துபயமுறுத்தின. சிலில் இடைநிகளர்களாக கோட்டல் வந்து சேர்ந்தார்கள். இப்படியாக பல இரவுகள் ஏமாற்றப்பட்டார்கள் பின்னதுவும் இல்லை. 4,5 நாட்

படிப்பகம்

www.padippakam.com

களின் பின் வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டார்கள். அது ஒரு நகரம்மாகிக்கொண்டிருக்கும்மிடம். அங்கு படுப்பதற்கு கூடபோதியளவு பாய் இல்லாமல் கஷ்டப்பட்டார்கள். எஜன்மார் ஏ.சி றூமில் ரி.வி வசதிகளுடன். காசுகொடுத்தது நாம் கஷ்டப்படுவது நாம் அனுபவிப்பது அவர்கள்ளா என்று துளசி ஆத்திரமடைந்தாள், எதுவும் செய்யமுடியாத நிலை நாட்கள் மாதங்களாகிக் கொண்டிருந்தன. இவர்கள் ஏஜன்டுடன் சண்டை பிடிக்கும்போதெல்லாம் ஏதாவது காரணம் சொல்லி அவர்களை சமாதானப் படுத்திவிடுவார்கள். இவ்வளவு காசு கொடுத்து வந்துவிட்டோமேயென அவர்களும் பேசாமல் இருந்துவிடுவார்கள். ஒருநாள் அரசஅதிகாரிகள் வந்து யார் உங்களை இங்குகிருக்க விட்டது என்றுகேட்டுவிட்டுபோய் தண்ணியை நிற்பாட்டிவிட்டார்கள். அதன்பின் எல்லாமே இவர்களுக்கு அருகிலிருந்த காடுதான்கெதி அதுவோரு மலைசூழ்ந்த இடமாதலால் அங்கிருந்த சிறு அருவி அவர்களுக்கு பெரிதும் உதவியது. இக்கஷ்டங்களை ஏஜன்டிடம் சொன்னால் அவர்கள் அதைபெரிதுபடுத்துவதில்லை அவர்கள் எப்படியும் சமாளிப்பார்கள் என்று அவர்களுக்குத்தெரியும். ஒருநாள் பெரிய ஏஜன் ஏதோ வேலையாக மற்றும் போய்விட்டார் அவர் பிடித்த குட்டிஏஜன்டுகளிடம் இவர்களை ஒப்படைத்துவிட்டு.

இதற்குள் ஒருநாள் ரிக்கற் ஓகே வெளிக்கிடுங்கள் என்றார்கள் குட்டிஏஜன்டுகள். வெளிககிட்டு விமானநிலையத்திற்கு சென்றாள் துளசி. உள்ளுக்கு சென்று போடிங்காட் எடுக்கும் இடத்தில் துளசி பிடிபட்டுவிட்டாள். சி.ஐ.டி வந்து இவள் இந்தியாவைச சீட்டில் ஜெர்

www.padippakam.com

மன்செல்கிறான்என அழகாகவிளக்கம் கொடுத்தான். அதன்பின் துளசி எவ்வளவு விளக்கம் கூறியும் அவர்கள் கேட்கவில்லை. விடியும்வரை விமானநிலையத்தில் வைத்திருந்து விட்டு ஒரு மதியம் போல் அவர்களை ஒரு கோட்டிற்கு சென்று விழங்கி விட்டு மீண்டும் ஒரு போலிஸ்ரேசனுக்கு கொண்டு சென்றார்கள். அங்கு இரைதேடிக்கொண்டிருக்கும் புலிகள்போல் பல காக்கிச்சட்டைகள் கைதிகளை அடிப்பதும் தமக்குள் கதைத்து சிரிப்பதுமாக இருந்தார்கள். கைதிகள் வேதனையால் அலறிக்கொண்டிருந்தார்கள். இதைப்பார்த்த துளசிக்கு பயத்தாலும் வேதனையாலும், தலைசுற்றியது. தாம்பிடிபட்டதறிந்தும் ஏனோ அவர்களை பிணைமீட்க பின்நேரம் 5மணிபோல் ஒரு லோயருடன் அவர்களுக்கு வேண்டியவர் என்றுசொல்லிக்கொண்டு வந்த அவர்களிடம்அவர்களைவிடமுடியாது என்றுகூறிவிட்டார்கள் சாப்பிட்டீர்களா பணம் வேண்டுமா என்றுஎதுவும் கேட்காமல் அவர்கள் போய்விட்டார்கள் அவர்களுக்கு பசிமயக்கமாக வந்தது. அவள் போனஅன்று அங்கு ஒருமலையாள இன்ஸ்பெக்ரர் இருந்தார். அவர் துளசிக்கு உதவ முன்வர அவருக்குக் கீழ் வேலை செய்யும் பொலீஸ் அதிகாரிகள் அவரை முறைப்பதும் அவரை நக்கலடித்துச் சிரிப்பதுமாக இருந்தார்கள் துளசிக்கு அதுதமிழர் சிங்களவர் பிரச்சனை மாதிரி இருந்தது. அதன் பின் அவள் மேசையில் இருந்தபடியே தூங்கிவிட்டாள். அடுத்தநாள் துளசியை விளங்கியபின் சிறையில் அடைத்தார்கள். பாழடைந்த சிறைக்கூண்டில் பல தரப்பட்ட பெண்கைதிகள் இருந்தார்கள். இவர்கள் எதுவித

www.padippakam.com

கவலையுமின்றி இருந்தது துளசிக்கு ஆச்சரியமாக இருந்தது. பின்தான் இவர்களைப் பற்றி அறிந்தாள் சாப்பிட வசதியில்லாமல் சிறுகளவுகள் செய்து விட்டு இங்கு கிடைக்கும் ஒரு நேர உணவையே அமுதமாகக் கருதுபவர்கள் என்று. மாடுகளுக்கு புண்ணாக்கு வைப்பது போல், பாண், பார்க்கவே அருவருக்கும் குழம்பு இவர்களுக்கு கொடுக்கப்பட்டது. சிறையில் படுக்கக்கூடி முடியாது - மண்தரையில் சிலரிடம் பனை பை இருந்தது சிலருக்கு அதுவும் இல்லை
3 நாட்களின் பின் வெளியில் வந்த துளசி உடன் வீடு திரும்பும் நோக்குடன்தான் வெளியில் வந்தாள் ஆனால் அவளுடன் வந்தவர்களின் அன்பு அவளை தடுத்துவிட்டது. பயப்பட வேண்டாம் திரும்பும் போகலாம் என்றார்கள். இதன் பின்னும் பல கஷ்டங்களை அனுபவித்தார்களே தவிர ஜெர்மனி அனுப்பப் படவில்லை. அதன் பின் துளசி வேறு வழிமூலம் ஜெர்மன் வந்து சேர்ந்தாள்.
இந்நிலை அகதிகளின் கஷ்டங்களை அறிந்த துளசி எம்மக்கள் எங்கும் சுதந்திரமாக வாழமுடியாத நிலையை எண்ணி ஏங்குகிறாள்.

---

## கண்டதும் கேட்டதும் (4)

இலங்கை அரசுமட்டுமல்ல, இந்திய அரசு, இந்திய எதிர்ப்பு இயக்கங்கள், இந்திய ஆதரவு இயக்கங்கள் எல்லாமே மக்களை பொது எதிரியாகக் கருதிவிட்டனவோ என்று தோன்றுகிறது.

வ. ஐ. ச. ஜெயபாலன், புதுமை, இல 2
89.



படிப்பகம்

www.padippakam.com

# எரித்திரியா



-நித்தி-

தகிக்கும்
வெயிலில்
செங்கடலின்
குளிர்மையான
காற்றிற்காக
அந்த மரத்து
இலைகள்
தலை தாழ்த்தும்

பேச்சுக்காற்றைச்
சுதந்திரமாக
விடும் உணர்வோடு
மண்ணிருத்துக்
குண்டுக் குருதி
கீச்சிட்ட குரலில்
கடல் மீதுக்காய்
இறங்கி எழும்

ஒதுங்கிப் போய்
வெயில் தகிப்பில்
வெதும்பிச்
சருகாகிப் போன
சின்னஞ் சிறுசி,
வற்றிப் போய்



படிப்பகம்


எலும்பு தெரியும்
மார்பகங்களில்
பால் உறிஞ்ச
முடிந்தபடும்.

அண்மிக்க அண்மிக்க
தண்ணீரும் தொலைவாகி
கானல் ஆகும்
ஓர் கிடா வாகிப் போய்.....
கற்குவியலின் பின்
அந்தப்
பொதி சுமக்கும்
ஜீவன் அருந்துவது
கடல் நீராகத்தான்
இருக்கும்.

உள்ளே
இழுபட்ட
இடுப்பராய்
தேய்ந்து போன
வயிற்றோடு
மனமெல்லாம்
ஊசிப் போய்
பகற் காலத்து
திங்களைப் போல
கண்காருமாகி

இரைச்சலாகி
அடைத்துப் போன
காதுகளோடு
நிலத்துக் கடியே . . . .

நீ நம்பிய கைகளோ
உன் கண்களைக்
குத்தி
வீசிய வெளியே
பயிர் மேய்வதாகி
சோவியத் சோஷலிஸ்ட்
வெறும் உள்ளுடல்
இல்லாத
கடல் ஓரத்து
நித்தை யாக . . . . . . . .



www.padippakam.com

# போபால் படுகொலைகள்

3400 பேருக்கு மேல் கொலை

10000 பேருக்கு மேல் முழு ஊனம்.

30000 பேருக்கு மேல் பாதி ஊனம்.

150000 பேருக்கு மேல்காயம்

—உலகிலேயே பெரிய இரசாயன ஆலை விபத்து எனக்கூறப்படும் போபால் விசவாயுக் கசிவினால் ஏற்பட்ட பாதிப்பு பற்றிய உத்தியோக பூர்வக் கணக்கெடுப்பு இது. உண்மை இன்னும் மிக அதிகமாக இருக்கும் என்பது சொல்லத் தேவையில்லை.

" சம்பவம் நடந்த நாளிலிருந்து நான் வைத்தியசாலைக்கு சென்று கொண்டு இருக்கிறேன். அதே நாளில் எனது தயார் இறந்து விட்டார். தகப்பனார் படுத்த படுக்கையாக ஆஸ்பத்திரியில் இருக்கிறார். ஒருவருடைய உதவியும் இல்லாமல் நானும் அங்கு செல்ல முடிவதில்லை 4 வருடங்களாக இருமிக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு முறை இருமும் போதும் எனது நுரையீரல் மேலும் கீழுமாக தள்ளுகிறது. எப்பொழுதாவது அரிதாக எனது சுவாசம்வழமைபோல் நடைபெறும்போது மட்டும் நான் வாழ்வதாக உணர்கிறேன். மீண்டும் திணறும்படியான மூச்சிழுப்பு வந்து சிந்திக்க முடியாமல் செய்து சாவை ஞாபகப் படுத்தும்."

கடந்த மார்ச் மாதம் வலியின் கொடுமை தாங்காது தீ மூட்டி தற்கொலை செய்து கொண்ட றைக்சி றைவர் கைலாஷ் பவாரின் வாக்குமூலம் இது. அது வரை 1500க்கும் மேற்பட்ட ஊசிகள் ஏற்றியுள்ளார்.

இவ்வாறு 4 ஆயிரத்துக்கும் அதிகமான மனித உயிர்களைக் கொன்றவர்களும் பல்லாயிரக் கணக்கான மக்களை



படிப்பகம்

www.padippakam.com

நிரந்தர நடைப் பிணங்களாக ஆக்கியவர்களும் பிறக்கும் குழந்தைகள் வெறும் சதைப்பிண்டங்களாகவோ, அங்கக் குறைபாடு நோய்கள் உள்ளவர்களாகவோ பிறக்கவைத்து எதிர்கால சந்ததியின் வாழ்வை-யே இருளாக்குபவர்களான அமெரிக்க பன்னாட்டு நிறுவனம்- யூனியன் காபைட் கம்பனியுடன் இந்திய ஆளும் கும்பல் ஒரு சமரசத்துக்கு வந்துள்ளது. அதன்படி இந்திய அரசுதரப்பு -UCC தரப்பு சட்டத் தரணிகள் சம்மதத்துடன் இந்திய உச்ச நீதிமன்றம் பாதிக்க பட்ட -வர்களுக்கு நஷ்டஈட்டுத் தொகையாக 715 கோடி ரூபா யூனியன் காபைட் கொடுக்க வேண்டும் எனக்கூறியுள்ளது. அத்துடன் இத்தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்வதற்கும் தடை விதித்துள்ளது.

## நடந்தது என்ன?

1984 டிசம்பர் 2ம் திகதி நள்ளிரவு இந்திய மத்திய பிரதேசத்திலுள்ள போபாலில் UCC யின் கிருமி நாசினித் தொழிற்-சாலையிலிருந்து அழுத்தம் காரணமாக (சரியான பாதுகாப்பு ஏற்-பாடுகள் செய்யப் பட்டு இருக்கவில்லை) வெளியேறிய நச்சுவாயு வான மீதைல் ஐசோசயனேட்டினால் பல்லாயிரம் மக்கள் பாதிக்கப் -பட்டனர். அச்சமயம் போபாலில் 640000 மக்கள் இருந்தனர், இவர்களில் பெரும்பகுதியினருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
பாதிக்கப்பட்ட மக்கள் நீதிமன்றம் சென்ற போது 1985ல் இந்திய அரசு -பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் நஷ்டஈடு கோரும் உரி-மை அரசுக்கேஉள்ளது எனச் சட்டம் போட்டு, அமெரிக்க நீதிமன்றத் -தில் UCC க்கு எதிராக 4500 கோடி ரூபா நஷ்டஈட்டுத் தொகையைக் கோரியது. இதன் மூலம் பாதிக்கப் பட்ட மக்கள் யூனியன் காபைற்றிற்கு எதிராக வழக்காடும் உரிமையைப் பறித்தது. இடைக்கால நிவாரண நிதியாக 7 கோடி ரூபா செஞ்சிலுவைச்


படிப்பகம்

www.padippakam.com

சங்கத்திடம் கொடுக்குமாறு அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இவ்விடைக்கால நிவாரண நிதி தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் முறையீட்டை ஆராய்ந்த போபால் மாவட்ட நீதிமன்றம் 350கோடி இடைக்கால நிவாரண நிதி தரப்பட வேண்டும் என உத்திரவிட்டது. அதை உயர்நீதிமன்றம் 250 கோடி ருபாவாக குறைத்தது. இதை எதிர்த்து UCC உச்சநீதிமன்றம் போன போது திடீரென உச்ச நீதிமன்றம் இடைக்கால நஷ்டஈட்டு வழக்கை கைவிட்டு பெப்ரவரி 14இல் 715 கோடி ருபா நஷ்டஈட்டுத் தொகையாகக் கொடுத்தா-த்தால் போதும் என உத்திரவிட்டுள்ளது.

மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள், பெரும்பாலும் -க்கு அருகாமையில் இருந்த சேரி ஏழை மக்களும் தொழிலா-ளருமாக இருந்ததுவும் இந்திய அரசின் வேண்டாத பெண்டாட்டி மனப்-பான்மைக்கு முக்கியகாரணமாகும். சம்பவம் நடந்தவுடன் விச முறி-வுக்கான முதலுதவிகளை விரைந்து செய்திருந்தால் ஓரளவு பாதிப்பு-களைக் குறைத்திருக்கலாம். சுற்றுப்புறச் சூழலையே நஞ்சாக்கி, பல உயிர்களைக் கொன்று, பல்லாயிரம் மக்களை நுரையீரல், கண், கல்லீரல் நோயாளிகளாக்கி, தினமும் பலர் தொடர்ந்து இறப்பதற்-கு காரணமாகி, பிறக்கும் குழந்தைகள் வெறும் சதைப் பிண்டமாக-வோ ஊனமுள்ளவர்களாகவோ பிறக்க வைப்பவர்களுமான – அமெரி-க்க ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனமான யூனியன் காபைற்றுக்கு எதிராக இந்திய அரசு ஒரு கிரிமினல் வழக்குக்கூட தாக்கல் செய்-யாதது மட்டுமல்ல, பாதிக்கப்பட்டவர்கள் எதிர்த்து மனு செய்யும் உரிமையைக் கூட பறித்துள்ளது. மூன்றாம் உலக நாடுகளிலுள்ள மக்க-ளின் மலிவான உழைப்புச் சக்தியை சுரண்டுவதற்கும் அவர்களின் 'மலி-வான' உயிர்களை கொலை செய்வதற்கும், இந்திய ஆளும் கும்பல் தொடர்ந்து ஆதரவளித்து இதன் மூலம் மேலும் நம்பிக்கையை ஊட்டி



படிப்பகம்

-யுள்ளது. 'பாதிக்கப்பட்டவர்கள் தாம் பாதிக்கப்பட்டுள்ளதை நிரூபித்தால் 1500 ரூபா நஷ்ட ஈட்டுத் தொகை கிடைக்கிறது. ஆனால் லஞ்சமாக அதிகாரிகளுக்கு 200 ரூபா கொடுக்க வேண்டியுள்ளது!' —

இத் தீர்ப்பையடுத்து முன்னாள் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி பகவதி "யூனியன் காபைற்று வென்று விட்டது. மக்கள் தோற்று விட்டனர்" என்றார். ஆனால் மக்கள் தோற்றுவிடத் தயாராக இல்லை என்பதை முன்னம் போலவே முழு வேகத்துடன் தொடரும் போராட்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன. 29 ஸ்தாபனங்கள், தொழிற்சங்கள், பெண்கள் அமைப்புகள், மாணவர் அமைப்புகள், மனித உரிமைக் குழுக்கள்— BGPSSS (போபால் விச வாயுவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான அமைப்பு) என்ற பெயரில் ஒன்று சேர்ந்து போராடுகின்றனர். இவர்கள் அண்மையில் ஏப்ரல் 19. தேசியளவில் போபால், பம்பாய், நியூடெல்கி மற்றும் முக்கிய நகரங்களில் இத் தீர்ப்பை எதிர்த்து பெரும் ஊர்வலங்களை நடாத்தியுள்ளனர். இப்படியான போராட்டங்களில் இந்திய மார்க்சீய சக்திகளும் இணைந்து போராடுவதன் மூலம் மக்களிந்த அவர்களிடத்தே நம்பிக்கை ஊட்ட வேண்டும்."



தீர்ப்பை எதிர்த்து சுவரொட்டிகள்

— ராகவன்.

# ஈழச் செய்திகள்

16.04.89.

பேச்சுவார்த்தை பற்றிப் பேச பிரதிநிதியை நியமிக்கும்படி கேட்டு விடுதலைப் புலிகளுக்கு, பிரேமதாசா கடிதம் எழுதினார்.

17.04.89.

திருகோணமலையில் இடம் பெற்ற குண்டுவெடிப்பையடுத்து 29 தமிழர் காணாமல் போய் விட்டனர்.

18.04.89.

திருமலைக் குண்டுவெடிப்பில் இறந்தோர் எண்ணிக்கை 46 ஆக உயர்ந்துள்ளது. 27 சிங்களவரும், 9தமிழரும், 3 முஸ்லீம்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

19.04.89.

நாட்டின் பூர்வாங்கக் கலந்துரையாடலுக்குப் பிரதிநிதியை நியமிக்குமாறு, ஜே.வி.பி.யை ஜனாதிபதி அழைத்துள்ளார்.

23.04.89.

பண்டுகத்தில் இடம் பெற்ற தீவைப்பு, துப்பாக்கிப் பிரயோகம், துன்புறுத்தல்களை கண்டித்து பண்டுகம் பெண்கள் ஊர்வலம் சென்றனர்.
தமிழ் பேசும் மக்களிடையே மோதல் ஏற்பட்டால், பேரினவாத சக்திகளே லாபம் அடையுமென முஸ்லீம் கொங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் கூறியுள்ளார்.

26.04.89.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், லண்டனிலிருந்து அதிகாலை கொழும்பு வந்து சேர்ந்தார். மாலை இலங்கை அரசுப் பிரதிநிதிகளுடன் முதற் சுற்றுப் பேச்சினை நடத்தினார்.

27.04.89.

தென்னிலங்கையில் அரசின் அடக்குமுறை, அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றைக் கண்டித்து ஜே.வி.பி. வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தியது.

29.04.89.

கிளிநொச்சிப் பகுதியில் இந்தியப் படையினரின் தேடுதல் நடவடிக்கையினால் மக்கள் இடம் பெயர்கின்றனர்.

'வெலி ஓயா' திட்டம்— வட-கிழக்கு இணைப்பை துண்டிப்பதற்கான சதி

மகாவலித் திட்டம் என்ற பெயரில் வெலி ஓயா என்ற சிங்களப் பெயருடன் (தமிழ் பெயர்- மணலாறு) புதிய மாகாணத்தை இலங்கையரசு தமிழ் பிரதேசத்-துள் புகுத்தி சிங்களக் குடியேற்றங்களை மின்னல் வேகத்தில் செய்கிறது.

ஒப்பந்தத்தில் "அடுத்துள்ள மாகாணங்கள் இணைந்து ஒரே நிர்வாகப்பகுதியாக இணைந்து செயல்பட அனுமதிக்கவும், கருத்தறியும் வாக்கெடுப்பின் வாயிலாகப் பிரிய அனுமதிக்கவும் சிறீலங்கா அரசு உத்தேசிக்கும் நிலையில் வடக்கு-கிழக்கு கீழே விபரிக்கப்பட்ட இணைந்து செயற்பட தீர்மானிக்கப்படுகிறது."
இத்திட்டம் நிறை வேறினால் அதை அநுராதபுரம்மாவட்டத்துடன் இணைப்பதன் மூலம் இவ் ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்ய முடியும்.

ரெலோ இயக்கத் தளபதிகளில் ஒருவரான ரஞ்சி என்பவர் இந்தியப் படையினரால் கைது செய்யப் பட்டுள்ளார். ஏற்கனவே யாழ் மாவட்டத்திலுள்ள சில ரெலோமுகாம்-கள் மூடப்பட்டு விட்டன.

இலங்கையரசும் விடுதலைப்புலிகளும் நடாத்தும் பேச்சு வார்த்தையை கே.பத்மநாபா (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), ஞானி (ரெலோவின் வன்னி மாவட்டத் தளபதி) வரவேற்றுள்-ளனர்.

தமிழீழ வடக்குகிழக்கு அமைதிப் படையினர் எடுத்துவரும் நடவடிக்கைகள் நியாயமற்-றவை என ரெலோ இயக்கம் தெரிவித்துள்ளது. இந்நிலை தொடர்ந்தால் மாற்று நட-வடிக்கைகளை நாம் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளது. புலிகளுக்கும் தமக்கும் இரகசிய தொடர்புண்டு என்ற வீண் சந்தேகத்தின் பேரிலேயே தமது அலுவலங்கள் மூடப்பட்டு, தமது உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக ரெலோ பேச்சாளர் ஒருவர் கூறினார்.

.— நன்றி: 'திசை'

www.padippakam.com

# புத்தக விமர்சனம்.

## ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும் ஓர் விமர்சனம்

பல பெரிய எத்தனையோ விடயங்களை வெகு சுருக்கமாக கவிதையால் சொல்லிவிட்டார். பொருளாதாரம், அரசியல் சரித்திரம், பெண் விடுதலை, இயற்கையழிவு பற்றிய பல்வேறு விடயங்கள், முதலாளித்துவ விவசாய உற்பத்தி முறையின் வருகைகள், இவற்றையெல்லாம் ஒன்றடக்கியதான் ஜெயபாலனின் ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்.

## புதியதோர் உலகம்

இப்புத்தகம் வெளிவந்து பல ஆண்டுகள் கடந்து விட்டன, என்றாலும் இது பற்றி விமர்சனம் எழுதாமல் இருக்க என்னால் முடியவில்லை.. புரட்சியில் ஈடுபாடு உள்ள அனைவரும் வாசிக்க வேண்டிய புத்தகம் இது. மிக இலகுவாக நாவலாக எழுதப்பட்ட புத்தகம். எத்தனையோ நடைமுறைப்பிரச்சனைகளை விபரிக்கிறது. இதில் குறிப்பிட்ட விடயங்கள் எவ்வளவு தூரம் உண்மை என்பது பற்றி எமக்குத் தெரியாது. (இக் குறிப்பிட்ட இயக்கத்தில் இருந்து வெளியேறியவர்கள், இப்புத்தகம் இயக்கத்தில் நடந்த 10%மான கொடூரங்களையே எடுத்துக் காட்டுகிறது என்கிறார்கள்) எது எப்படி இருப்பினும் ஒரு இயக்கம் வெளியில் களங்கமற்றதாக தெரிந்து போதும் உள்ளுக்குள் என்ன நடப்பது என்பது பலருக்குத் தெரியாது. இப் புத்தகம் இயக்கங்களுக்குள்ளே நடக்கக் கூடியவற்றை எடுத்துக் காட்டுகிறது இப்படிக் கயமைகள் இனி அமையப் போகும் இயக்கங்களிலும் ஏற்படாமல் தடுக்க விரும்புபவர்கள் அனைவரும், இப் புத்தகத்தை வாசிப்பது அவசியம்



படிப்பகம்



# வாசகர் கடிதங்கள்...

புதுமையின் 2வது இதழ் பார்த்தேன், இதில் இடம்பெற்ற கடிதங்களில் சில எரிச்சல் ஊட்டுவதாக அமைந்தது

" நாங்கள் எமது மனைவிகளை அடிமையாகவா வைத்திருக்கிறோம்?"

"பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்" என்று பல்வேறு புராணங்களை எழுப்பியிருந்தனர். இவர்களை அலட்சியம் செய்வதே நல்லது, ஏனெனில் இவர்களின் மர மண்டையில் ஊறிப்போன பழக்க தோசம் இவைகள்.

எந்த ஒரு ஆணும் தனது தாயும், தனது பெண் சகோதரிகளும், சந்தோசமாக வாழ வேண்டும் என்று விரும்புகின்றான். ஆனால் தனது மனைவியையோ சம்பளம் இல்லாத வேலைக்காரியாக, (......) தனது விருப்பத்தை நிறைவேற்றுபவளாக வைத்திருக்கின்றனர். அதுமாத்திரமல்ல இவர்களில் சிலர் பெண்ணடிமை பற்றியும் பேசுகிறார்கள்.

உங்கள் சகோதரிகள் இன்னொருவனுக்கு அடிமைப் பட விரும்பாத ஆண்களே, உங்கள் மனைவியை மாத்திரம்... அவளும் இன்னொருவனின் தங்கைதானே. ஆனால் இவளுக்கு மாத்திரம் அடி, உதை, வார்த்தைகளால் கொலைகள்(....)

ஆண்களே, "பெண் அடிமை" என்றதும் ஏன் பதறுகிறீர்கள்? பெண் அடிமை என்றதும் உங்கள் மனைவியரைத்தானே நினைக்கிறீர்கள். பெண் விடுதலை என்பது உங்கள் சகோதரிகளுக்கும் சேர்ந்ததுதானே. (.....)

ஆண்கள் யாராவது வீட்டுக்கு வந்தா, நாம் முன்னுக்கு வந்தா _

www.padippakam.com

விட்டால், அல்லது கதைத்து விட்டால், பேய் அறைந்தது போ-
ல் முகம்மாறும். வந்தவர்கள் "மனைவி வந்து கதைக்க மாட்டா.
வோ? "என்றால் "அவாவுக்கு வெட்கம்" என்று பயங்கர பொய்
சொல்வது. வந்த ஆணுடன் கதைத்துவிட்டால், ஒழுக்கமும் நாம்
அகத்தைக்காதபடி நையப்புடைப்பது.
மைய இவ் வேலைக்குப்போக தடை, கருத்தடை செய்யத்தடை
என்றும் எத்தனையோ தடைகள் ......

பிரான்ஸ். . சந்திரா

மன்னிப்புக் கோருகிறோம்...

!புதுமை 'இல-2, வாசகர் கடிதம் என்ற பகுதியில்-

...புலிகளை விமர்சித்தல் என்ற பெயரில் புற நிலையில் இந்திய ஆக்கிரமிப்பாளர்களை ஆதரிக்கக்கூடிய இழி செயலையோ அல்லது ஈழப் போராளிகளைக் (புலிகளை) காட்டிக் கொடுக்கும் செயலையோ நாங்கள் செய்யவில்லை.

ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கை-க்கு ஆதரவு என்ற பெயரில் தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா துணை-ஏகாதிபத்தியமாக எழுச்சி பெறுவதை இவர்கள் ஆதரிக்கின்றார்கள்...

இதில் இவர்கள் எனக் குறிப்பிட்டிருந்தது CPM கட்சிகளையே என எஸ். வி. ராஜதுரை அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தார். கடிதத்தை சுருக்கும்போது ஏற்பட்டு விட்ட கருத்துப் பிழைக்கு மன்னிப்புக் கோருகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

அன்பின் புதுமை ஆசிரியர் குழுவுக்கு
புதுமை இல. 1 வெளி வந்த .தாசனின் அடிமைகளின் அடிமைகள் கட்டுரை பற்றி

...........மாறாக நவீன சமையல் கருவிகள் வேண்டிக் கேட்கும் பெண்களை பிற்போக்குவாத மேலைத்தேயப் பெண்கள் எனச் சித்தரிக்கிறார்கள் பொதுமை எனச் சாடி பொதுமையில் வந்த முழுப் பொருளையும் அறிப்பிடாமல் தனியோர் வசனத்தை எடுத்து கொச்சைப் படுத்தி எழுதியுள்ளார். அதற்குப் பின்னால் அந்த சமையல் கருவிகளைப் பற்றித் தெரிவது, வாங்குவது, வாங்க முயற்சிப்பது, இதில் ஒன்றையேனும் செயற்படுத்த யாரால் முடியும்? கடைசி யாழ்ப்பாணத்தில்கூட அனேகருக்கு இப்படி ஒரு கருவி இருக்கிறது வேண்டும் என்று சொன்னால்கூட, அது எப்படி இருக்கும், ஓஅப்படியா என்பவர்களின் தொகைதான் கூடுதலாக. எனவே இதை யாரால் வாங்க முடியும், சிந்திக்க முடியும், நிச்சயமாக மேல்வர்க்கத்திலும், உயர் மத்தியதர வர்க்கத்திலும்தான். அடிமட்டத்தில் உள்ள தொழிலாளருக்காக போராடும் ஓர் அமைப்பு சாதாரணபெண் விடுதலைக்குத்தான் போராட முடியும். பெண்ணின் விடுதலை கருவியல்ல ...கீழ், மத்தியதர வர்க்கத்திலும் வாங்க முடியும் என்று கட்டுரையாளர் சொல்வாராக இருந்தால் அது தற்பகுவாதம். ஓர் புரட்சியின் போது பெண் விடுதலையும் இதனுள் அடங்கும். பெரும்பாலும் உயர்மத்தியதர வர்க்கம் மேல் வர்க்கத்துடன்தான் சேரும். அப்படி வேண்டியும் அழும் குழந்தைக்கு வாயில் சூப்பியை வைப்பதுபோல சுதந்திரம் கேட்கும் பெண்ணிற்கு நவீன சமையல் பாத்திரத்தை வாங்கிக் கொடுத்து திரும்பவும் அடுப்படிக்குள் அமர்த்தி பெண் விடுதலையை பிற்போக்கடையச் செய்வது நிராகரிக்கப்பட வேண்டியது.

டென்மார்க். நா. ஆனந்தன்.

நான் எனது கட்டுரையில் குறிப்பிட்டதுபோல் பெண்களுக்குத்தான் வீட்டு வேலை என்பதை எதிர்காதது ஈரோஸ் இயக்கம் மாத்திரமல்ல, இங்கு அவ்வியத்திற்கு வக்காலத்து வாங்கும் இந்த நண்பரு



படிப்பகம்

ரும்தான் என்பது இவரின் கடிதத்திலிருந்து தெரிய வருகிறது. இவர் கூறியுள்ளபடி ஒரு சிலருக்குத்தான் நவீனகருவிகளை வாங்கமுடியும் என்பது முற்றிலும் உண்மை. ஆனால் இது வர்க்க சமுதாயம் இச்சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளமை சொல்லித்தெரியவேண்டியதல்ல. இங்கு நாம் சாடவேண்டியது, ஒரு சிலருக்கு வாங்கக் கூடிய பொருள்கள் மற்றவர்களால் வாங்கமுடியாமல் அமைந்துவிட்ட இச்சமுதாய அமைப்பையே தவிர, இக் கருவிகளை வாங்கி தமது வேலைப் பழுவை குறைத்துக்கொள்ள நினைக்கும், ஏழைப் பெண்களையல்ல. இவர்களின் இத்தாக்குதல் பெண்களை "உணர்வு" ரீதியிலும் பாதிக்கும். அதாவது பெண்களை, வர்க்க வேறுபாடுகளைபற்றி சிந்திப்பதை வடுத்து "இருப்பதில் திருப்தியடைதல்" என்ற தப்பான மனப்பாங்கை வளர்ப்பதாகும்.

எமது முக்கிய நோக்கம், ஏழைகளை ஏழ்மையை பகிர்ந்து கொள்ளவைப்பதல்ல, மாறாக ஏழ்மைக்கான காரணத்தை அறிந்து, அதை அழிப்பதே.

புதுமை ஆசிரியர் குழுவிற்கு,

புதுமை இல 2இல் மக்களுக்கு தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யும் உரிமையை நாம் ஆதரிக்கிறோம். எனக்குறிப்பிட்டுள்ளீர்கள். தற்போது இந்த "உரிமை" இலங்கையில் என்னமாதிரி பாவிக்கப் படுகிறது? முதலாளித்துவ, இராணுவ அராஜகத்தின் நிறைந்த நாட்டில் இந்த உரிமையால் எந்த பயனும் இல்லை என்பதை எல்லா "ஜனநாயக" நாடுகளிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். சரியான போராட்டங்களை ஒன்றிணைப்பதுதி

உறுதுணை கொடுப்பதும் முக்கியமான பணியாகும் என்பது நியாயமானது.

"புதுமையின் தாக்கம்" என்ற கட்டுரையில் சோசலிசத்தை அடைய பெண்களைச் சேர்த்துக் கொள்ள மறுப்பவர்களா சோசலிசப்புரட்சியின் பின் 'இந்தாபிடி பெண்ணே உனக்கு சுதந்திரம் என்று கொடுக்கப்போகிறார்கள்' என்று எழுதப் பட்டுள்ளது.

இது மிகப்பிற்போக்கான கருத்தாகும். வர்க்கபேதமற்ற சமுதாயத்தையமைக்க ஆண்களும், பெண்களும் சேர்ந்து போராட வேண்டுமே தவிர யாரும் யாரிடமும் பிச்சை கேட்கத் தேவையில்லை. சோசலிசப் புரட்சியின் பின் யாரும் பெண்ணுக்கு பிச்சை போடத் தேவையில்லை, தானாகவே கிடைக்கும். ஜெயபாலனின் கருத்தில் இலங்கை அரசு மட்டுமல்ல இந்திய அரசு, இந்திய எதிர்ப்பு இயக்கங்கள் எல்லாமே எமது மக்களை பொது எதிரியாகக் கருதி விட்டனவோ என எண்ணத் தோன்றுகிறது என்பதில் உண்மை உள்ளது. ஆகுதி சிறுகதை பேச்சு வளக்கில் அமைந்த எழுத்து நடை, கரு யாவும் படிப்பவர்களை கதையோட்டத்துடன் இணைக்கிறது.

பதில். — எது கட்டுரையை தவறாக விளங்கி சரியாக விமர்சித்த எமது வாசகருக்கு எமது நன்றி.

www.padippakam.com

# புதுமையார் பதில்கள்.



கேள்வி:- யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் ஆயிரம் பொன். இதுபோல ...

பதில் :- இந்தியன் ஆமி இருந்தாலும் அழிவு, சென்றாலும் அழிவு.

கேள்வி:- உங்களுக்கு பிடித்த சஞ்சிகை..?

பதில் :- காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.

கேள்வி:- தாங்கள் ரஜீவ் காந்தியைச் சந்தித்தால் .

பதில் :- பேசாமல் பழயபடி பைலட் வேலைக்கே போய்விடச் சொல்வேன்.

கேள்வி:- தற்போது வடக்குக்கிழக்கு மாகாணத்தை ஆட்சி அதிகாரம் செய்பவர்கள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

பதில் :- அதுதான் அவர்களே சொல்லிவிட்டார்களே தமக்கு அதிகாரம் இல்லை என்று.

கேள்வி:- சிறுகதை ஆசிரியர் பார்த்திபன் பற்றி...

பதில் :- இவர் ஒரு சிறுகதைத் தொழிற்சாலை, போகிற போக்கில் தமிழ்வாணனையே தோற்கடித்துவிடுவார் போலு உள்ளது, ஆனால் படைப்பது தரமானவை.



படிப்பகம்

www.padippakam.com

கேள்வி:- உங்களுக்குப் பிடித்த் திரைப் படங்கள் ?

பதில்:- 'அலைகள்', வீடு, கண்சிவந்தால் மண்சிவக்கும்.

கேள்வி:- விக்கு பாக்கியநாதனின் கவிதைச் சோலை படித்தீர்களா?

பதில்:- அச் சோலையில் அடிக்கடி கவிஞர் காசியானந்தன், கவிஞர் கண்ணதாசன், ஔவையாரும் வந்து போகிறார்கள்.

கேள்வி:- ஜேர்மனியில் பாசிசக் கட்சிகள் செல்வாக்கு அதிகரித்து வருவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:- விரைவில் மூட்டை கட்டலாம் என்று.

கேள்வி:- தாங்கள் ஏன் பத்திரிகை ஆரம்பித்தீர்கள் ?

பதில் :- எதிர் நீச்சல் போட.

கேள்வி:- தமிழ் சினிமாவைத் திட்டித் திட்டி எனது நண்பர் திரும்பவும் தமிழ் சினிமாவையே பார்பதன் காரணம் என்ன?

பதில் :- வாழ்கை முழுக்க திரை போட்ட (போடப்பட்ட) எமக்கு திரைப் படங்களே வாழ்வாய் போயிற்று.

கேள்வி:- கடவுள் மேல் நம்பிக்கையுண்டா?

பதில் :- கடவுள் அநேகமாக இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

கேள்வி:- பெண்ணிலைவாதம் மார்க்சியத்திற்கு எதிரானதா? (- றஞ்சி)

பதில் :- இல்லை அதற்கு மெருகூட்டுவது.

கேள்வி:- சலாம் பொம்பே பார்த்தீர்களா ? (சிவா)

பதில்:- ஹிந்திப் படத்தை ஆக்கிரமித்துள்ள சாம்பல் பள்ளத்தாக்கு, டூயட்; [illegible] காட்சிகள் தவிர்ந்த ஒரு புதுமையான படைப்பு. சேரிவாழ்வு விபச்சாரம் என்பவற்றை யதார்த்தமாக எடுத்துக் காட்டுகிறது.

கேள்வி:- ஈழத்தில் பெண்விடுதலைக்காக போராடும் இயக்கம் எது?

பதில் :- நானும் அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன் (- திருமதி யோகம்)

கேள்வி:- தமிழ் ஈழப்போராட்டமானது தோல்வியடைந்தமைக்கு காரணம் என்ன? (றஜி)

பதில் :- மற்றைய பல காரணங்களுடன், இடது கை கட்டியதை வலது கை உடைத்தமையே.

கேள்வி:- நீர் யாரையும் பார்த்து அருவருப்பதுண்டா? (வாணி)

பதில் :- ஆம் பெண் அடிமை விலங்கைப் பார்த்து.

---

கேள்வி, பதில் பகுதியில் நாமே பல கேள்வியைக் கேட்டு பதிலையும் தந்து உள்ளோம். இனியும் நீங்கள் கேள்வியை அனுப்பாத பட்சத்தில் நாமே இனியும் கேள்விகளைக் கேட்டு அறுப்பதாக உள்ளோம் என எச்சரிக்கிறோம்.

---



படிப்பகம்

www.padippakam.com

# நூல் அறிமுகம்



தேனீ

– அரசியல், பொருளாதார, கலாச்சார இதழ்

தொடர்புகளுக்கு

THENEE
Schul str.5
7016 Gerlingen

சர்வதேச சங்கீத சுரத்தட்டு (பாகம்: 1)

–முதல் தமிழிசைப் புத்தகம். : இசை முறை

எழுதியவர்: எம். பி. கோணேஷ்.

தொடர்புகளுக்கு:

M.P.KONESCH
Schtzendelle.2
4052 Korschenbroich.3

கவிதைச் சோலை

–திருமதி விக்னு யாக்கியநாதனின் கவிதைகளின் தொகுப்பு.

தொடர்புகளுக்கு:

S.PACKIYANATHAN
Droote.13
4600 Dortmund.14



படிப்பகம்

www.padippakam.com

* திசை _ யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் வாரப் பத்திரிகை இதுவரை காலமும் ஆங்கிலம் தெரிந்தவருக்கு மாத்திரம் கிடைக்கக் கூடியதாய் இருந்த அறிவு எல்லோருக்கும் கிடைக்-கக் கூடியதாக ஒரு பத்திரிகை.

*தமிழருக்கு மிக மிக முக்கியமானது.

*இதன் பிறப்பு தமிழ்ச் சமுதாயத்தை அறிவு, ஆய்வு, தேடல் ஆகியவற்றில் முன்னேற்றி செலுத்தும் என்பதில் ஐயம் இல்லை.

காசோலை அனுப்பவேண்டிய முகவரி: (வருடம்: 50 U.S$)

NEW ERA PUBLICATIONS Ltd.
118, 4th CROSS STREET
P.O.BOX.122
JAFFNA.
SRI LANKA.

---

* அத்துடன் இந்திய மார்க்சிய சர்வ தேசியவாதிகளும்—ரோசா லக்சம்பர்க் படிப்பு வட்டம் என்ற அமைப்பில் பல முக்கிய பிரசுரங்களை வெளியிட்டுள்ளனர்.

அவற்றில் பின்வரும் பிரதிகளை எம்மிடம் பெறலாம்

01. சார்பு நிலைப்பொருளாதாரம் ஓர் அறிமுகம் —மகா உத்தமன்.

02. காலத்தின் அறைகூவல்களும் இந்திய மார்க்சியர்களும் —சமந்தா பானர்ஜி

03. ஈழப்போராட்டம்: தேசபக்தியும் கம்யூனிஸ்டுகளும்

தொடர்புகளுக்கு: 'புதுமை'



படிப்பகம்

www.padippakam.com

# கண்டதும் கேட்டதும் (5)

இங்கு (ஜெர்மனியில்) சில ஆண்கள் செய்யும் சில பிரச்சாரங்களாலும் அங்குள்ள மக்களின் அறியாமையினாலும், வெளிநாட்டில் உள்ளவர்களை, மணக்க பல பெண்கள் சீதனத்துடன் தமக்கு தெரியாத ஒருவருடன், வாழ்வதற்காக வந்தும் வந்து கொண்டும் இருக்கிறார்கள்....

ஊர்க்குருவி, தேனி, பங்குனி 89

எமது குறிப்பு:-

ஆண்கள் இங்கு வரும் போது அதை ஒருவரும் பொருட்படுத்துவதில்லை, பெண்கள் வந்து விட்டால் அவள் கல்யாணம் செய்யத்தான் இங்கு வருகிறார்கள் என்று பலர் முடிவெடுக்கிறார்கள். அன்றும், இன்றும், ராணுவத்தால் பாதிக்கப் பட்டவர்களில் பல பெண்களும் அடங்குவர் பல பெண்கள் கைதுசெய்யப் பட்டும் கொலை செய்யப் பட்டும் இருக்கிறார்கள். பல்லாயிரக் கணக்கானோர் பலாத்காரப் படுத்தப் பட்டும் இருக்கிறார்கள், ஒவ்வொரு சகோதரியரும் இங்கு வருவது திருமணத்திற்காக இல்லை குருவியாரே, இன்று ஒருவருக் கொன்று நடக்க, நாளை அது நமக்குதான் என்று பயந்து வாழ்பவர்களில் எமது சகோதரர்களுடன் எமது சகோதரிகளும் அடங்குவர்.

நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் நான் மறுக்கிறேன், ஆனால் அதைச் சொல்ல உனக்குள்ள உரிமைக்காக சாகும்வரை போராடுவேன்.

—வால்டேயர் —1694-1778



படிப்பகம்

www.padippakam.com

## இடதுசாரிகளுக்கு முக்கிய அறிவிப்பு

ஜெ.வி.பி இயக்கத்தின் தீவிர சிங்கள தேசிய வாதத்திலிருந்து விடுபட்டு பாசிச தன்மை வாய்ந்த இயக்கமாக மாறி வருகிறது.

இவர்களின் கொடூரக் கொலைகளுக்கு பல சிங்கள புரட்சி வாதிகள், தொழிற்சங்க வாதிகள், இடது சாரிகள் கொலையாகி உள்ளனர். அது மாத்திரமல்லாமல் இவர்கள் பூதகரமாக வளர்ந்து வருகிறார்கள். இலங்கையை பாசிசத்திடம் இருந்து பாதுகாக்க இடது சாரிகளால்தான் முடியும். இன்று இதற்கு மிகவும் முக்கியமானது சகல இடது சாரிகளும் ஐக்கிய முன்னணியை உருவாக்க வேண்டும். பாசிசத்திற்கு எதிரான போராட்டத்திற்கு இது முக்கியமானது. தவறின் எமது வீழ்ச்சியும் தவிர்க்க முடியாதாகி விடும்.

எங்கும் மரணம்
எங்கும் இரத்தம்,
எங்கும் ஆயுதம்,
எங்கும் துடியாய்த் துடிக்கும்
மக்கள் கூட்டம்,
இப்படியே போனால் மனித
இனமே அளிந்து விடுமோ என
எங்கும் மயம்
எதனால் இந்த அவலம்
எதனால் இந்த துயரம்
சிந்திப்போம் விடைகிடைக்கும.

— நந்தினி.



படிப்பகம்

www.padippakam.com




மறக்காதே.
சந்தாவை அனுப்பு

'புதுமை'– (வருடம்– 4 இதழ்கள்)

வருட சந்தா– 16 டி.எம் (ஜேர்மனி)

தனிப் பிரதி – 4 டி.எம்

<u>வெளி நாடுகள்</u>

வருட சந்தா– 12 US$.

Michael Bretzinger [அனுப்பவேண்டிய பெயர்)

Bank:COMMERZBANK

Bankleitzahl(Branch Number):500 400 00

Konto-Nr(Account Number):7720402

என்ற வங்கிக் கணக்குக்கு அனுப்பி வையுங்கள்

முழுமையானதும் நிலையானதும் பிழையானது.

படிப்பகம்

www.padippakam.com

## கண் விழித்திருப்போம்

சேரன்

---

கண் விழித்திருப்போம் நண்பர்களே

சோகம் படர்ந்த தேசப்படமும்

இதுவரை காலம்

சிந்திய இரத்தமும்

இதுவரை கால
இழப்பும்
நெருப்பும்

எரியும் மனமும்

இன்னொருவனுக்கு அடிமையாகவா?

இரவல் படையில்

புரட்சி எதற்கு?

எங்கள் நிலத்தில்

எங்கள் பலத்தில்

எங்கள் கால்களில்
தங்கி நிற்போம்

வெல்வோமாயின் வாழ்வோம்

வீழ்வோமாயினும் வாழ்வோம்

நமது பரம்பரை போர் புரியட்டும்

நன்றி யமன் (1984)

படிப்பகம்